PSSM MALAYSIA

# பிரமிட் சக்தியின் பேராற்றல்



தினசரி வாழ்க்கையில் பிரமிட்



# 1. பிரம்மிட் தியானம்

மிகப் பழங்காலத்திலிருந்தே பிரமிடுகள் கட்டப்பட்டு வந்துள்ளன. எகிப்தில் மட்டுமல்லாது மயன் இன்கான் நாகரிகம் காலத்திலேயே அவர்களது இடத்திலேயே பிரமிடுகள் இருந்தன என்று நம்மால் அறிய முடிகிறது. வேதங்களில் 'பிரமிட் கோண கட்டமைப்பு' பற்றி குறிப்பு உள்ளது. பிரமிடின் கட்டமைப்பு அல்லது அதன் கட்டிட அமைப்பு நம்மை வியப்பூட்டுகிறது! ஆச்சரியப்படுத்துகிறது! மூன்று கோண வடிவான உறுதியான பரந்த அடிப்பகுதியையும், நான்கு பக்கங்களும், குவிந்த மேல்முனையில் முடிவு பெறுகின்றன. இன்றைக்கும் உலக அதிசயங்களுள் ஒன்றாக பிரமிட் கருதப்படுகிறது. அன்றைய நாகரீக உலக வளர்ச்சியின் ஆதாரமாகவும், கட்டிடக்கலையின் சான்றாகவும் இன்றளவும் நின்று பேசப்படுகிறது, புகழப்படுகிறது.

ஒரு பிரமிடில் நான்கு சம முக்கோணங்கள் 51° 50' சாய்ந்த கோணத்தில் ஒரு 'பொன்கோண' அமைப்பில் உள்ளன. இதன் தனிப்பட்ட விசேஷ கட்டமைப்பின் காரணமாக பூமியின் புவியீர்ப்பு விசை பிரபஞ்ச சக்தியைப் பெருமளவு தன்பால் ஈர்த்து (குவிமுறை வழியே) நிலைபெற்ற அதன் கீழ்ப்பகுதிக்கு வெள்ளமென அனுப்புகிறது. எனவே பிரமிடுகள் சக்திப் பெட்டகமாகக் கருதப்படுகிறது. அதன் பேராற்றல் திறமை அதன் பெயரிலேயே காட்டப்படுகிறது. 'பைரோ' என்றால் 'நெருப்பு' அல்லது 'மகா சக்தி'. 'அமிட்' என்றால் 'உள்' அல்லது 'மையம்'. ஆகவே பிரமிட் என்றால் சக்தியை தன் மையத்தில் வைத்திருக்கும் ஒரு கருவி என்றாகிறது. எனவேதான் ஒரு பிரமிட் அளவற்ற பிரபஞ்ச சக்தியைத் தன்னுள் சேர்த்து வைத்திருக்கும் ஒரு சக்திப் பெட்டகமாகக் கருதப்படுகிறது. 10,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தியர்கள் இந்தக் காரணம் கருதியே பிரமிட்கள் கட்டி அளவற்ற பல்வேறு காரணங்களுக்காக உபயோகப்படுத்தி வந்தனர். பூமியின் புவியீர்ப்பு விசை சக்தியும், பிரபஞ்ச சக்தியும் கலந்த ஒரு கலவை சக்திதான் பிரமிடின் சக்தி என்றால் தவறாகாது.


பிரமிடின் உள்ளே அல்லது பிரமிடின் அடியில் உட்கார்ந்து தியானம் செய்தால் அது பிரமிட் தியானம் என்று அழைக்கப்படுகிறது. ஒருவர் வெளியே தியானம் செய்தால் பெறும் சக்தியைவிட மூன்று மடங்கு அதிக சக்தியை பிரமிடிற்குள் அமர்ந்து தியானம் செய்து பெறலாம். அதுவும் ஆரம்பநிலை தியானிகளுக்கு சக்தியை அபரிமிதமாக அள்ளித்தரும் இந்த பிரமிட் தியானம் ஒரு பெரும் வரப்பிரசாதம் எனலாம்.

பிரமிட் உள்ளே அமர்ந்து தியானம் செய்த பலரும் மிகப்பெரிய தளர்வு (relaxation) ஓய்வு நிலையைத் தமது உடல் அடைந்தது என்றும், எண்ணங்கள் உள்ளிட்ட பல வெளித்தூண்டுதல்கள் (புலன் சார்ந்த தூண்டுதல்கள்) அடங்கி, மனம் மிக மிக ஆழ்ந்த அமைதிபெற்று, தமது உடலும், மனதும் ஓர் உயர்நிலைக்குத் தள்ளப்பட்டதென்றும், அதே நிலை மனதின் உள்ளே ஆழ்ந்த மற்றும் உயர்ந்த (வெளித்தொந்தரவுகளுக்கெல்லாம் மிக மிக அப்பால்) ஸ்தானத்தில் தம்மை நிறுத்தி அற்புதமான, புனிதமான அனுபவம் பெறக் காரணமாகவும் அமைந்தது என்றும் கூறுகின்றனர்.

பிரமிட் தியானத்தின்போது நமது உடல் பல்வேறு இரசாயன மற்றும் மின்காந்த அதிர்வுகளுக்கு உள்ளாகிறது. இதுவரை இருந்த எல்லாவித நச்சுத்தன்மையினின்றும் உடல் சுத்தம் செய்யப்பட்டு, சக்தியூட்டப்படுகிறது. உடலின் ஒவ்வொரு செல்லும் பரிபூரண ஆரோக்கியம் அடைகிறது. எல்லா நோய்களும் உடலைவிட்டு அகலுகின்றன.

**பிரமிட் என்றால் என்ன?**

ஒரு சதுர அல்லது முக்கோண அடிப்படை அமைப்பின் நான்கு பக்கக் கூம்பு முனைக் கட்டமைப்பே (நினைவுச் சின்னம்) பிரமிட் எனலாம். அந்த நான்கு பக்கவாட்டுப் பக்கங்களும் மேலே ஒரு 'கூர்முனையில்' இணைகின்றன. பிரமிட் எனும் சொல் கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. 'பிரமிஸ்' அதாவது 'பிரமிட்' மூன்றும் அதற்கு மேற்பட்ட பக்கப் பகுதிகளும் ஒரு சதுர வடிவ அடிப்பகுதியினின்றும் மேலெழும்பி ஒரு கூர்முனையில் முடிவது.



# 2. பிரமிடின் பேராற்றல்

மனிதனால் கட்டப்பட்ட பல பிரமிடுகளில் பலவித சோதனைகள் நடத்தி அதன் பயன்களை மூன்று வகைப் பயன்களாகப் பிரிவு செய்திருக்கின்றனர். அவை யாவன:

**அ) சேமித்துக் காக்கும் திறன்**

**ஆ) குணமாக்கும் திறன்**

**இ) பௌதிக உடல் தாண்டிய ஆன்மிக அனுபவங்கள் தரும் திறன்.**

இயல்பாகவே சக்தியூட்டிகளாக இருக்கும். பிரமிடுகள் ஆன்மிகத் தேடல் தாகம் உள்ள தியானிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட (சக்தி தருவது போக) பல விதங்களில் உதவுகிறது என்றால் அது மிகையில்லை. பிரம்மர்ஷி பத்ரிஜி இதைத் தாமே பலவித பரிசோதனைகள் (பிரமிட் தியானம் செய்து) நடத்தி வெற்றிகரமாக நிரூபித்துள்ளார். அவருடைய அனுபவங்கள் முழு மனித குலத்திற்குமே கட்டாயமாகத் தெரிவிக்கப்பட்டு பயன் விளைவிக்கும் ஆற்றலுடையவை. பத்ரிஜி பலவித சோதனைகள் செய்து பிரமிடின் அற்புத ஆற்றலை மீண்டும், மீண்டும் நிரூபித்து அதற்குப் 'புதுயுக ஆன்மிக இயக்கம்' என்றும் பெயரிட்டார்.

பிரமிடுகள் 1,2,3,4 என்ற வகையில் திசைகளில் அமைக்கப்பட்டு (தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்று ஒவ்வொன்றாய்) கட்டப்பட வேண்டும். மிக அதிக அளவு பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் வகையில் பிரமிட் அடிப்பகுதியில் இருந்து 1/3 அளவு உயரத்தில் அதன் பிரபஞ்ச சக்தி சேமிக்கும்படி கட்டப்பட வேண்டும். அதுவே 'அரச அறை' (King Chamber) என அழைக்கப்படுகிறது. அதிகபட்ச சக்திப் பகிர்வு இதில் அமர்ந்து தியானம் செய்யும்போது தியானிகளுக்குக் கிடைக்கிறது.

# சக்தி சேமிக்கும் திறன்

வெளியிடங்களில் வைக்கப்படும் உணவைவிட இரண்டு, மூன்று மடங்கு அதிகமாய் பிரமிட் உள்ளே வைக்கப்படும் உணவின் தன்மை கெடாமல் பாதுகாக்கப்படுகிறது. உள்ளே வைக்கப்படும் பொருள் எதுவாயினும் சரி, பிரமிட் அதன் தன்மையை, இயல்பைப் பெருக்கச் செய்து, கெடாமலும் வைக்கும் ஆற்றல் உடையது. உள்ளே வைக்கப்படும் பொருட்களின் இயல்புப் பெருக்கம் அதிகமாவதால் வெளித் தூண்டிகளால் அதன் தன்மைக்கு ஏற்படும் அத்தனை அழிவுக் கூறுகளின் தாக்குதல்களில் இருந்தும் பொருள் காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. எனவே அப்பொருள் கெட்டுப் போனால் உண்டாகும் நோய்களும், அதன் எதிர்மறை விளைவுகளும் தடுக்கப்படுகின்றன. எனவே நுண்ணுயிர் வளர்சிதை மாற்றம் (micro organism growth) முழுமையாகத் தடுக்கப்படுகிறது.

எனவே பால், பழங்கள், காய்கறிகள் போன்ற எப்பொருள் ஆயினும் சரி, பிரமிட் உள்ளே வைக்கப்படும்போது, அப்படியே புத்தம் புதிதாகவும், மேலும் சுவை உடையதாகவும் ஆக்கப்படுகிறது. பிரமிடுகளில் வைத்து பாதுகாக்கப்படும் விதைகள் விதைக்கப்படும் போது அதிக மகசூல் தருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

# குணப்படுத்தும் ஆற்றல்

நமது சக்திக் குறைவையும், கீழ்மட்ட உணர்வு நிலைகளையும் பிரமிட் தியானம் சரிப்படுத்துகிறது, மேம்படுத்துகிறது. எதிர்மறை மின்னணுக்கள் பிரமிட் தியானத்தால் தூண்டப்பட்டும், பெருக்கப்பட்டும் நமது உடலில் நல்ல சக்தியாக செயல்படுகின்றன. மின்னணுக்கள் என்பன அதிகப்படி அல்லது குறைவான எலக்ட்ரான்கள். இதன் மின்னணுக்கள்தான் உடலின் ஒவ்வொரு செல்லையும் சரிபார்த்தல், புதிய செல்களை உருவாக்குதல் ஆகிய முக்கிய செயல்களைச் செய்கின்றன. அவை காற்றின் மூலமாக நம் உடலில் நுழைந்து ரத்த ஓட்டத்தில் கலக்கின்றன, கலந்து ரத்தத்தோடு உடல் முழுவதும் பயணிக்கின்றன.

மாசுபட்ட காற்றால் உண்டாக்கப்பட்ட நேர்மறை மின்னணுக்கள் உடலில் நோய்களையும், மன அழுத்தத்தையும் உண்டாக்குகின்றன. எதிர்மறை மின்னணுக்கள் நம் உடலில் சாதகமான விளைவுகளை உண்டாக்குகின்றன. உதாரணமாக ஒரு மனிதன் அதிகபட்ச மாசுக்காற்றைச் சுவாசிக்கும்போது அவனுக்கு வாந்தி, நோய்த்தன்மை ஏற்படுகின்றன. இது 'நேர்மறை மின்னணுக்களால்' உண்டாகும் தீய உணர்வாகும். மாறாக ஒரு பெரும் மழைப் பொழிவிற்குப் பிறகு அல்லது ஒரு பெரிய நீர்வீழ்ச்சிக்கு அருகில் அமர்ந்திருக்கும் மனிதனுக்கு (காற்றில் கலந்திருக்கும் எதிர்மறை மின்னணுக்களால்) நல்ல சுகம் உண்டாகிறது. அதாவது இயற்கை கார்பன்-டை- ஆக்சைடை எடுத்துக்கொண்டு நிறைய ஆக்ஸிஜனை (பிராணவாயுவை) கொடுப்பதால் இயற்கைச் சூழலில் மனிதனுக்கு நிறைய பிராண சக்தி கிடைக்கிறது. பிரமிடுகள் நிறைய எதிர்மறை அணுக்களை உண்டாக்குவதால் அவை நமது உடலின் மின்காந்தத் தளத்தில் பட்டு 'சாதகமான சக்திமிகு சூழலை' மனிதனுக்கு ஏற்படுத்திக் கொடுத்து, அவனை சக்தி பெறச் செய்து மன அமைதியும் உண்டாக்கும் வல்லமை படைத்ததாக பிரமிட் தியானம் அமைகிறது.

தியானம் எல்லா நோய்களையும் குணமாக்கும் ஆற்றல் பெற்ற சக்தியாகத் திகழ்கிறது. பல்வேறு மனக் கவலைகளினாலேயே மனிதனுக்குப் பலவித நோய்கள் தோன்றுகின்றன. எல்லா மனக்கவலைகளும் புத்தி, அறிவு முதிர்ச்சிமையால்தான் உண்டாகின்றன. உடலின் ஆன்ம சக்தி குறைவதாலேயே அறிவு முதிற்ச்சியின்மை உண்டாகிறது, ஆன்மிக ஞானமும் இல்லாமல் போகிறது. ஆனால் தியானத்தால் நமக்கு அபரிமிதமான ஆன்மிக சக்தியும், ஆன்மிக ஞானமும் உண்டாவதால் புத்தி முதிர்வு நிலை அடைகிறது. புத்தி முதிர்வினால் கவலைகள் காணாமல் போகின்றன. கவலையின்மை உடலை, மனதை நோயற்றதாக்கி, ஆரோக்கியமாக்கி, எல்லா குறைகளையும் சரி செய்து விடுகின்றன. ஆகவே தியானம் உடல் பலம், மனநலம் இரண்டும் தரும் காமதேனு ஆகிறது.

பிரமிடுகள் 'உயிரின சக்தி'யைத் தருவதால் அதை உபயோகிப்பவர்களுக்கு எதையும் சமாளிக்கும் ஆற்றல் தானாக வருகிறது. எனவேதான் பிரமிட் தியானம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தி, நோய்களை முற்றிலும் குணமாக்குகிறது. ஆஸ்துமா, பல் வலிகள், தலைவலி, சளி, காய்ச்சல், உயரத்த அழுத்தம், கீழ்வாத நோய்கள், இதய படபடப்பு, நரம்புத் தளர்ச்சி, நரம்புக் கோளாறு வியாதிகள், தூக்கமின்மை இவற்றை பூரணமாகக் குணப்படுத்தி, ஜீரண சக்தியை மேம்படுத்தி, பதற்றத்தைக் குறைத்து, தோல் குறைகளை நிவர்த்தி செய்து, மனிதனை இளமையாகவும், நோயற்றவனாகவும் தியானம் மாற்றுகிறது.

# பௌதிக உடல் தாண்டிய அனுபவங்கள்

பிரமிட் தியானம் செய்யும்போது அதன் அளப்பரிய ஆற்றலால் மனித மனது வெகு விரைவில் எண்ணமற்றுப்போய் விடுகிறது. எண்ணமற்ற மனது பௌதிக உடல் எல்லையைத் தாண்டுகிறது. சூட்சும சரீரத்தின் பயணம் செயல்படத்துவங்கிப் பல விவரிக்க முடியாத ஆன்மிக அற்புத அனுபவங்களை பிரமிட் தியானிகள் பெற்று விடுகின்றனர். இந்தப் புத்தகத்தின் இறுதிப் பகுதி அவ்வாறான பல மகான்களின் சூட்சும சரீர அனுபவங்கள் பற்றி விளக்கம் தருகிறது.

இதைப் படிக்கும் தியானி பிரம்மிட் தியானம் செய்து தனது சொந்த அனுபவங்களைப் பெற வேண்டும். பெற்று ஞான ஆனந்தம் அடைய வேண்டும். இப்புத்தகத்தில் தொடரும் அத்தியாயங்கள் பிரமிட் எப்படி வேலை செய்கின்றன என்றும் தியானிகளின் அனுபவங்கள் பற்றியும் கூறுகின்றன. படித்துப் பயன்பெறுங்கள்.

"பிரமிட் சக்தியின் ரகசியம்" என்ற பெயரில் திரு.பில்ஷல் மற்றும் எட் பெட்டிட் (Billschal and Ed Petitt) எழுதிய புத்தகத்திலும், "பிரமிட் சக்தி" என்ற பெயரில் திரு.மேக்ஸ் டஆத் (Max Toth) மற்றும் க்ரீக் நெயில்சன் (Greg Nielsen) ஆகியோர் எழுதிய புத்தகத்திலும் பல பரந்துபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் பதிவு செய்யப்பட்டுப் பிரமிடின் சக்தி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பொழுதோ நம்மிடத்தில் "பிரமிடியல்" என்ற பெயரில் ஒரு படிப்புத் துறையை உள்ளது. பிரமிட் பற்றிய அனைத்துத் தொகுப்பு விவரங்களும் மற்றும் பிரமிட் சக்தி பற்றியும் தரும் தகவல் பெட்டகமாக அத்துறைப் படிப்பு இன்றைக்கு உள்ளது.

*1. பிரமிட் தொப்பி*

அமர்ந்து தியானம் செய்யும்போது குழந்தைகளும், பெரியவர்களும் அணியத்தக்க வகை பிரமிடுகள் இவை. வேறு ஏதேனும் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் அணியலாம். விதவிதமான அளவுகளில் இவை கிடைக்கின்றன. இவை ஞாபக சக்தி பெறவும், திறமை கூடவும் மாணவர்களால் உபயோகப்படுத்தப்படுகிறது. அவர்களுக்கு இவ்வகைப் பிரமிடுகள் நன்கு உதவி செய்யும்.

*2. பிரமிட் தண்ணீர் தாங்கி (பீமர் - Beamer)*

இவ்வகைப் பிரமிடுகளால் மூடி வைக்கப்பட்ட தண்ணீர் சேகரிப்புத் தொட்டிகளில் உள்ள நீர் பலவகைகளில் சக்தியூட்டப்படுகிறது. இந்நீர் மருத்துவக் குணங்கள் கொண்டதாய் உள்ளது. ஜீரண சக்திபெற இதை அருந்தலாம். முகம் பொலிவு பெற இந்நீரால் முகம் கழுவலாம். கிருமி நாசினிக் குழம்பாக முகச்சவரத்திற்குப் பின் உபயோகிக்கலாம்.

*3. பிரமிட் மூக்குக் கண்ணாடிகள்*

கண்பார்வைக் கோளாறு பிரச்சனைகளிலிருந்து விடுபடவும், ஆழ்ந்த 'தியானம்' செய்யவும் இவை உபயோகப்படுத்தப்படுகின்றன.

*4 முட்டிகளில் அணியும் பிரமிடுகள் ( Knee Pyramids )*

மூட்டு வலிப் பிரச்சனைகளிலிருந்து விடுபட்டுச் சுகம் பெற இவ்வகைப் பிரமிடுகளை முட்டிகளில் கட்டிக்கொண்டு பயன்பெறலாம்.

*5. மார்பக பிரமிட்*

இதய வலிகள் குறைய, வயிற்று வலிகளிலிருந்து விடுபட இவ்வகை கனமற்ற பிரமிடுகளை அந்தந்த இடங்களில் வைத்துக்கொண்டு ஆழ்ந்து தியானம் செய்து வலி நீக்கம் பெறலாம்.

# 3. சமகாலத்திய பிரமிடுகள்

உள்ளே சென்று அமர்ந்து தியானம் செய்யத்தக்க வகையில் பிரமிடுகள் பல அளவுகள் (5° × 5' அடி முதல்) கட்டப்பட்டுள்ளன. அச்சு அசலாய் அவை போலவே அமைக்கப்பட்ட பலவகை, பல அளவுப் பிரமிடுகள் அவைகளின் விசேஷத் தன்மை காரணமாகவே வீட்டிற்குள்ளேயே உபயோகிக்கும் விதங்களில் உள்ளன. உதாரணம் : பிரமிட் தொப்பிகள், பிரமிட் கூரைகள், பிரமிட் வடிவ மிகச்சிறிய பொம்மை போன்ற பொருட்கள் உள்ளன. அவற்றைக் கைப்பைகளில், சட்டைப் பைகளில், அறைகளின் உள்ளே வைத்துப் பயன்படுத்தக்கூடியனவாய் உள்ளன. அப்படிப்பட்ட பலவகை பிரமிடுகள் இன்றைக்கு நமக்குக் கிடைக்கின்றன. மேலும் எவ்வாறு பிரமிடுகளை நாம் தினசரி வாழ்க்கையில் பல புதிய வகைகளில் பயன்படுத்த முடியும் என்பதற்கான விரிவான பல ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் ஒவ்வொரு வருடமும் மேற்கொண்டுள்ளனர்.

பிரமிடுகள் எல்லா வகை மூலப்பொருள் கொண்டும் (உலோக, காகித, பிளாஸ்டிக்) செய்யப்படலாம். ஆனால் அதற்கெனவே பிரத்தியேகமாய் உள்ள முக்கியத்துவம் கொடுக்கும் 51° 50' அளவு தங்கக்கோண சாய்மானத்தில் அமைக்கப்பட வேண்டும். வாசகர்கள் அறிந்து கொள்ளவும், பயன்பெறும் வகையிலும், சில வகைப் பிரமிடுகள் பற்றி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

# 4. பிரமிடின் முக்கிய பயன்கள்

பலவித நோய்களிலிருந்து விடுபட்டுப் பரிபூரண சுகம் பெற பிரமிட் தியானம் உதவுகிறது.

*1. ஒற்றைத் தலைவலி / தலைவலி ( Migraine/Headache)*
பிரமிட் தொப்பியை தலையில் அணிந்து 30 நிமிடம் தியானம் செய்தால் தலைவலியிலிருந்து விடுபடலாம்.

*2. ஆஸ்துமா, இதயப் பிரச்சனைகள்*
வலி குறையும்வரை மார்புப் பிரமிடை ( Chest Pyramid) நெஞ்சின்மீது வைத்து தியானம் செய்யலாம்.

*3. வயிற்று வலி, வாயுப் பிரச்சனைகள், வயிற்றுப்புண், முதுகு வலி*
பிரச்சனைப் பகுதியில் மார்புப் பிரமிடை வைத்து தியானம் செய்தால் வலி குறையும், பிறகு மறையும்.

4. கால் முட்டி, சேர்தசை வலிப் பிரச்சனை (Joint pain ), சுளுக்கு, கால் வெடிப்புகள்*
பிரச்சனைப் பகுதியில் மூட்டுவலிக்கென்று பிரத்தியேகப் பிரமிடை வைத்துக் காலையிலும், மாலையிலும் 45 நிமிடங்கள் தியானம் செய்து வந்தால் வெகு விரைவில் வலிகளில் இருந்து விடுபடலாம்.

*5. வலிப்பு, கண் பார்வைக் கோளாறுகள், காதுப் பிரச்சனைகள், மேம்பட்ட உறக்கம் மற்றும் மனமகிழ்வு பெற*
பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிரமிடை வைத்துக் காலை, மாலை 45 நிமிடம் தியானம் செய்து பயன்பெறலாம்.

*6. அதிகரிக்கும் நோய் எதிர்ப்பு சக்தி*
ஒவ்வாமை போன்ற 'மாசு' பிரச்சனைகளுக்கு பிரமிட் அணிந்து தியானம் செய்து நம்ப முடியாத அளவுக்குப் பயன்பெறலாம். பிரமிட் ஆற்றல் தொடர்ச்சியாக உடலுக்குக் கிடைக்கும்படி செய்தால் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி கூடும்.

*7.ஆரோக்கிய தண்ணீர்*
மூன்று நாள் ( பிரமிட் வடிவ சேமிப்பானில் வைக்கப்பட்ட) பிரமிட் தண்ணீர் தொடர்ந்து குடித்து வந்தால் பிரபஞ்ச சக்தி நமது உடலின் எல்லாப் பகுதிகளிலும் அபரிமிதமாகப் பெருகி ஆரோக்கியம் தரும்.

*8. ஞாபக சக்திப் பெருக்கம்*
மாணவர்கள் பாடம் படிக்கும்போது பிரமிட் தொப்பி அணிந்து படித்தால் அவர்களது ஞாபக சக்தி அதிகரித்து கற்கும் திறன் மேம்படும், அறிவு வளரும்.

*9. சீர் சக்தி ஓட்டம்*
பிரமிட் கூரைகளின் அடியில் அமர்ந்து எத்தனைபேர் தியானம் செய்தாலும், அத்தனை பேருக்கும் சமமான சக்திப் பெருக்கம் உண்டாகும். சீரான சக்தி ஓட்டம் அங்கு ( Uniform flow of energy) நடக்கும்.

*10 எதிர்மறை எண்ணங்கள் குறைதல்*
பிரமிட் தன்னோடு இணையும் 'குணத்தன்மையை', பல மடங்கு பெருக்கும் ஆற்றல் கொண்டது. எனவே பிரமிட் அடியில் அமர்ந்து தியானம் செய்யும்போது, 'நேர்மறை எண்ணங்களை' ஓடவிட்டால் எதிர்மறை எண்ணங்கள் தாமாகக் குறைந்து போகும்!

*11. அதிகரிக்கும் உற்பத்தித் திறன்*
விதைக்கப்படுவதற்கு முன் ஒன்றிலிருந்து ஐந்து நாட்கள் வரை பிரமிடில் வைக்கப்பட்ட விதைகள் விளைநிலங்களில் விதைக்கப்பட்டால் உற்பத்தி 20 முதல் 100% வரை பெருகும் வாய்ப்பு உண்டு. வெளியில் வைக்கப்பட்ட விதைகளைவிட பிரமிட் உள்ளே வைத்து எடுக்கப்பட்ட விதைகளின் வீரியம், அதிகரிக்கும். அவை முளைத்து வரும்போது மிக ஆரோக்கியமானதாகவும் இருக்கும்.

*12. வீரிய மருந்துகளின் பயன்பாட்டுத் தாக்கம்*
குளுக்கோஸ் மற்றும் ஐசோ-ஓஸ்மாடிக் திரவங்கள் பிரமிட் அடியில் வைக்கப்பட்டு 'போதை மருந்து மீட்பு' முகாம்களில் மிகவும் பயன்பட்டு வருகிறது. அத்திரவ மருந்துகள் ஊசி மூலம் அல்லது வாய் மூலம் பாதிக்கப்பட்டவர் உடலில் சேர்க்கப்படலாம்.

# 5. பிரமிட் உள்ளே மக்களின் காட்சிகள் மற்றும் ஆன்மிகத் தடய அனுபவங்கள்

மிக மோசமான குப்பைப் பகுதியில் காணப்பட்ட மிக உன்னதமான மனக் காட்சிகள் - பிரமிட் உபயோகித்ததால் ஏற்பட்ட அனுபவங்கள்*

'கனவு' என்பதே ஒருவித விழிப்பு நிலைதான். அதாவது நாம் உறங்குகையில் நமக்கு ஏற்படும் விழிப்புநிலை எனலாம். பிரமிட் உறக்கம் செய்தபிறகு சமீபகாலமாக எனக்கு (பெட்டிட்) உண்டாகும் கனவுகள் மிகத் தெளிவானவையாகவும், மிக உயர்ந்த நிலைக் கனவுகளாகவும் வருவதை உணர்கிறேன். சாதாரணமாய் உறங்குகையில் உண்டாகும் கனவுகளைப்போலன்றி, இப்புதிய பிரமிட் உறக்கக் கனவுகள் தரத்தில் முதன்மையாய் மேம்பட்டு இருப்பதை உணர்கிறேன் என்கிறார் பெட்டிட். சமீபத்தில் என்னுடைய கனவில் ஒரு அழகிய குழந்தை சிரித்து மகிழ்ந்ததைக் கண்டேன். அந்த மாயச் சிரிப்பு மனதைக் கொள்ளை கொண்ட அச்சிரிப்பு மனிதனின் பரிணாம வளர்ச்சியை ஒரு படமாகக் காட்டியதைக் கண்டேன். அந்தச் சிரிப்பு இப்பூமியில் மனிதனின் தற்காலிக இருப்பை ஒரு வரைபடம் போல், பல்வேறு நிலைகளில் காட்டியதை உணர்ந்தேன். அக்குழந்தை ஒரு முதிய ஆன்மாவாக இருந்தும் மீண்டும் பிறந்த ஒரு குழந்தையாக (பல ஜென்மங்கள் அறிந்த சிரிப்பு அது) இருப்பதையும் உணர்ந்தேன் என்கிறார் திரு. பெட்டிட்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரமிட் உள்ளே கட்டிலில் படுத்திருக்கும்போது, ஒரு அரைகுறை உறக்கமும் விழிப்பு நிலையுமான பொழுதில் நான் கண்ட விசித்திரக் காட்சி இது. ஒரு வெள்ளை நிறச்சாலை! அங்கே இருபுறமும் கம்பீரமாய் வளர்ந்திருந்த மரங்கள்! சுற்றியும் செழிப்பான பண்ணை நிலம்!(Farmland) மறுக்கப்பட்ட(refused) ஒரு அசுத்தப் பகுதியில் எனக்குத் தெரிந்த பகுதியில் நான் வண்டி ஓட்டிக் கொண்டு செல்வதாகக் கண்டேன்.

ஆனால் என் கனவில் அது அசுத்தப் பகுதியாக இல்லாமல் மிக மிக அழகானதாகவும், ஒரு செப்பனிடப்பட்ட ஒரு மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட மிக அழகான பகுதியாகக் கண்டேன்.

அங்கே என் கண்முன்னே (கனவில்) ஜொலிக்கும் எட்டு பிரமிடுகள் கட்டப்பட்டிருந்தன! ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில்! அவை 250 அடி உயரமும் 375 சதுர அடி தரைப் பரப்பளவும் கொண்டதாக இருந்தன. முக்கியமாகச் சாலையிலிருந்து குறுகிய பல கிளைச் சாலைகள் பிரிந்து அப்பிரமிடுகளுக்கு அழைத்துச் செல்லும்படி அமைக்கப்பட்டிருந்தன. அந்த சின்னச் சாலைகள் ஒவ்வொன்றும் அவை எந்த வண்ணப் பிரமிடுக்கு அழைத்துச் சென்றதோ, அதே வண்ணத்தில் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக நான் சென்ற பிரமிட் மூன்றாவது பிரமிட் (கிழக்குப் பக்கமாக இருந்த பிரமிட்).

அந்த இளம் ரோஜா நிறப் பிரமிடை நோக்கிய ரோஜா நிறச் சாலையில் நான் திரும்பி என் வண்டியை செலுத்திச் சென்றேன். பிரமிடை நெருங்கியதும் மகிழ்வான மனத்தைச் செடிகளும், பூக்களும் தரும் ஒரு அற்புத மணத்தை உணர்ந்தேன். எந்தவித அசுத்த வாடையும் அங்கில்லை( நான் கனவில் கண்டது நிஜத்தில் இருக்கும் ஒரு அசுத்தமான பகுதி. ஆனால் என் கனவில் அது மிகப் பரிசுத்தமான பகுதியாகத் தென்பட்டது).

நான் என் வாகனத்தை அந்தப் பிரமிட் வாசலில் நிறுத்தி, நான் கொண்டு வந்திருந்த குப்பைச் சுமைகளை பிரமிட் வாசலில் அமைக்கப்பட்டிருந்த 'சுமைதாங்கி பட்டையில்' ( Convey Belt ) ஏற்றினேன். அந்தக் குப்பைப் பெட்டிகள் 160 அடி சதுர பிரமிட் உள்ளே சென்று ஏழு வாரங்கள் உலர வைக்கப்பட்டு, தீய கிருமிகள் அழிக்கப்படும் வரை வைத்திக்கப்பட்டது. அதன் பிறகு அவை மேலும் ஒரு சுமைதாங்கிப் பட்டையில் ஏற்றப்பட்டு உரமாக மாற்றப்பட்டு அங்கிருந்த செடிகளுக்கும் தரப்பட்டது. இவ்வாறாக என் குப்பைகள் சுத்தப்படுத்தப்பட்டு தரமான உரமாக மாற்றப்பட்டு, புதிய செடிகளுக்குச் செழிப்பு தந்தன.

சில குப்பைகள் உரமாகின. சில கட்டிடம் கட்ட உபயோகப் பொருட்களாயின. சில சாலைகள் அமைக்க உதவின. சில இயற்கை உரமாயின. (இக்கனவு நமது பழைய ஜென்ம வாசனைகள் குப்பையாகத் தொடர்வதையும், பிரமிட் தியானம் அவற்றை மாற்றிச் சுத்தமான ஆக்கப் பொருளாக மாற்றுவதையும் குறிக்கலாம்).

இந்தக் கனவுக் காட்சி மிகத் தெளிவாக என்னால் உணரப்பட்டது. பிரமிட் அனுபவம் பெற்ற எவருக்கும் இந்த அனுபவங்கள் புதிதல்ல. அவர்கள் எல்லோருக்குமே ஞாபக சக்தி அதிகரித்து இம்மாதிரி 'பூர்வ ஜென்ம' நினைவுகள் வந்ததுண்டு.

மிக நவீன யுக நகர் காட்சியும் அந்த மக்கள் நிலைக் காட்சியும்* பெட்டிட் கணிசமான நேரத்தை பிரமிட் உள்ளே ஒரு சாய்வாசனத்தில்(Chaise / unge ஒரு மூலையில் சாய்மானமாக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சோபா போன்றது) அமர்ந்து கொண்டு இருப்பது வழக்கம். அவர் அங்கே ஒரு நாள் ஒரு அரைகுறை விழிப்பு நிலையில் இருந்தபோது (உலக நினைவும் உணரப்பட்ட நிலையில்) கண்ட காட்சி இது. (அதாவது அவருக்கு இவ்வுலக விழிப்புணர்வும் இருந்தது. கனவு நிலை உணர்வும் இருந்தது. அது கனவல்ல நிஜம்! நிஜமல்ல கனவு! நிஜமான கனவு! கனவுபோல் ஒரு நிஜம்!) அக்காட்சியின் விவரம் பின்வருமாறு:

அந்த நிஜக்கனவில் அவர் உணர்ந்ததாவது: ஒரு பெரிய நகரத்தில் அவர் 'மிதந்து' கொண்டிருக்கிறார். மிக உன்னதமாக நிர்மாணிக்கப்பட்ட நகரம்! வானவில்லின் வர்ணஜால ஒளியில் குளித்த நகரம்! அந்த நகரில் நான்கு பக்கங்களிலும் பளபளக்கும் கற்களால் கட்டப்பட்டிருந்த மிகப்பெரிய பிரமிட்கள்! அப்பிரமிட்களின் உச்சி ஒரு கிறிஸ்டல் கல் போல் ஜொலித்தது (ஒரு மனதை வருடும் மெல்லிய ஆனால் ஜொலிக்கும் ஒளியைப் பெற்றிருந்தது). அந்நகருக்குத் தேவையான சக்தி ஆற்றலை இப்பிரமிடுகள் வழங்கிக் கொண்டிருந்தன.

அந்நகரின் மக்கள் ஒரு கப்தான் போன்ற நீளமான அங்கிகளை அணிந்திருந்தனர். ஆண்கள் கோடுகள் வரையப்பட்ட கனமான அங்கிகளையும், பெண்கள் பூ போட்ட அங்கிகளையும் அணிந்திருந்தனர். அவர்கள் 10 முதல் 15 அடி உயரத்தில் இருந்தனர். அவர்கள் அனைவரும் நல்ல மகிழ்வோடும்,

அங்கு நான் (பெட்டிட்) தரைசெல் வாகனங்கள் எதையும் காணவில்லை. மாறாக பச்சை வண்ண புற்கள் போன்ற மிருதுவான நகரும் ஆற்றல் கொண்ட ஊர்திகள் போன்ற அமைப்பைக் கண்டேன். அவை மக்களை ஏற்றிக் கொண்டு மக்கள் சுற்றிலும் அமைந்த பச்சைப் பசேலென்ற தோட்டங்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு களிக்கும் வண்ணம் மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. நகரக் கட்டிடங்களும் அவைகளின் இயக்கத்திற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தன. நடைபாதைகள் செம்மையாய் இருந்தன! ஆங்காங்கே அமர்வதற்கு கல் பெஞ்சுகள் இருந்தன.
அங்கிருந்த மக்கள் பேசிக் கொள்வதை என்னால் கேட்க முடிந்தது. இன்றைக்கு நாம் கேட்கும் அதே நகர மொழி! வீடுகள், குழந்தைகள், மற்ற இதர செயல்பாடுகள்! அங்கிருந்த ஒரு பெண் தனக்கு இன்று பிறந்தநாள் என்றும், ஆனால் அவள் அதைக் கொண்டாடும் மகிழ்ச்சியில் இல்லை என்றும், தான் நடுவயதில் இருப்பதாகவும் இன்னும் 900 ஆண்டுகள் கழித்துதான் முதுமை அடையப் போகிறாள் என்றும் கூறிக் கொண்டிருந்தாள்! ஆக 900 வருடங்கள்தான் அங்கு ஒரு 'முதிய வயது' என்று உணர்ந்தேன் என்கிறார் பெட்டிட்.

அந்நகரின் வீடுகள் சச்சதுரமாய் ஒரு ஊடுருவும் தன்மை கொண்ட ஒரு வகைப் பொருளால் கட்டப்பட்டிருந்தன. வீடுகள் தவிர வேறு பல கட்டிடங்களும் இருந்தன. இரண்டு மூன்று அடுக்குகளோடும், மிக உயரமின்றியும் அவை இருந்தன! அவ்வகை வீடுகளுள் ஒன்றின் உள்ளே நான் சென்று பார்த்தேன்! மிகப்பெரிய அறை ஒன்று மிருதுவான குஷன் இருக்கைகளோடும், பெஞ்சுகளோடும் இருந்தன. அந்த அறை பொழுதுபோக்கும் சாதன வசதிகளோடு இருந்தது

நாம் சினிமா என்றழைக்கும் வெள்ளித்திரை நிகழ்ச்சி போன்ற காட்சிகளை அங்கிருந்த மக்கள் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர். சுவரே 'திரையாக' மாறியிருந்தது. அவர்கள் யாரை சந்திக்க விரும்பினார்களோ அந்த மனிதன் அவர்கள் கண் முன்னே திரையில் தோன்றி அவர்களோடு உரையாடக் கண்டேன். எந்தவித மின்சுவிட்சோ, பட்டனோ உபயோகிக்காமல் வெறும் தமது விருப்பத்தை வைத்தே அவரவர் பல காட்சிகள் கண்டு கொண்டிருந்தனர்! உரையாடிக் கொண்டிருந்தனர்!!
ஆனால் அங்கிருந்த எவருமே வேலை எதுவும் செய்யாமல் பொழுதைக் கழித்தது எனக்கு கவலை அளித்தது என்கிறார் பெட்டிட். சில கட்டிடங்கள் கலைக்கூடமாகவும், பொழுதுபோக்கு மையங்களாகவும் இருந்தன. துணி துவைத்த மாதிரி அவ்வகை துவைக்கும் இயந்திரங்களோ எதுவும் தென்படவில்லை! ஆனால் மக்கள் மிகப்பொலிவாய் உடை அணிந்திருந்தனர்! சமையலறை இல்லை! குளிக்கும் அறை இல்லை! மேசை, நாற்காலிகள் இல்லை! அவர்கள் எதையும் உண்ணவும் இல்லை! ஏன்? எப்படி? விடைகாண இயலாத பல கேள்விகள் என் மனதுக்குள் வட்டமடித்தன என்கிறார் பெட்டிட்.

காற்றில் போக்குவரத்து நிகழ்ந்து கொண்டிருந்தது; உருண்டையான லேசான வெளிச்சம் காட்டும் கப்பல்கள் போன்ற ஊர்திகள்! அவை நம்ப முடியாத வேகத்துடன் ஆனால் சத்தமின்றி மிருதுவாக இங்குமங்கும் சென்று கொண்டிருந்தன. அவை கீழே இறங்கும்போது நிறுத்தப்படும்போது நேராக வீடுகளின் கூரைமீது வந்து நின்றன. அந்த காற்றில் மிதக்கும் கப்பல்கள் எந்தவகை குறிப்பிட்ட இலக்குமின்றி, சப்தமின்றிச் சென்று கொண்டிருந்தன!

அந்நகரின் மக்கள் தமக்குப் போதுமான சக்தி ஆற்றலை அங்கு அமைக்கப்பட்டிருந்த பிரமிடுகளின் மூலம் பெற்றுக் கொண்டிருந்தனர். தேவைப்படும்போது ஊர்திகளில் ஏறி வேறு நகரங்களுக்குச் சென்றனர். நீண்ட பிரயாணத்திற்கு வேண்டிய சக்தியை பிரமிட் மூலம் பெற்றனர்! செல்லும் தூரத்திற்குத் தக்கவாறு சக்தி பெற்றனர்!

இவ்வாறு பிரமிடுகளில் இருந்து சக்தியை பெற்றுப் பயணிக்கும் பல மிதக்கும் கப்பல்கள் கண்டபின் நான் என்னுடைய அரைகுறை உறக்க நிலையில் இருந்து விடுபட்டு வெளிவந்தேன்! நான் கண்ட கனவு மிகத் தெளிவாகவும் நீண்ட நாள் நினைவில் நிற்கக் கூடியதாகவும் இருந்தது! அதற்குப் பிறகு பல தடவை பிரமிட் சென்று பலவகை அனுபவங்கள் பெற்றேன்! ஆனால் வானவில் நகரக் கனவு திரும்ப வரவே இல்லை என்கிறார், பெட்டிட்!

*நல்ல கவன ஆற்றல் பெற்ற ஒரு மாணவனின் பிரமிட் அனுபவம்*

எங்களுக்குத் தெரிந்த ஒரு மாணவன் இருந்தான். தனது படிப்பில் அதிக மதிப்பெண் பெற இயலாத அளவு அவனுக்குக் கவனச் சிதறல் ஏற்பட்டது. நாங்கள் அவனுக்காக, அவன் உள்ளே அமர்ந்து தியானம் செய்ய ஒரு பிரமிட் அமைத்துத் தந்தோம். ஒவ்வொரு நாள் மாலையிலும் அதனுள் அமர்ந்து தியானம் செய்து வந்தான். வெகு விரைவில் அவனது மதிப்பெண்கள் உயர்ந்தன.

தேவ் வில்காக்ஸ் ( Dev Wilcox ) என்ற பெயருடைய அம்மாணவன் பிரமிட் தியானத்திற்குப் பிறகு அவனுடைய தன்னம்பிக்கையும், திறமையும் அதிகரித்தன என்றான். பிரமிட் உள்ளே ஒருமுகத்தன்மை உணர்வும், அமைதியும், நிம்மதியும் கிடைத்தன என்றான். அதேபோல் என்னுடைய யோகா ஆசிரியரும் பிரமிட் தியானம் செய்து பலன் பெற்றார் என்கிறார், பெட்டிட்!

*ஹாலிவுட் நட்சத்திரம் ஜேம்ஸ் காப்பர்ன் ( James Coburn ) னின்பிரமிட் அனுபவங்கள்*

ஜனவரி 13, 1994 ஆம் ஆண்டு தேசிய விசாரணையாளர் ஜேம்ஸ் கூறியதைக் கூறுகிறார்: "நான் தீவிரமாக பிரமிட் சக்தியை நம்புகிறேன். என் பிரமிட் கூடாரத்திற்குள் தவழ்ந்து சென்று உள் அமர்ந்தேன். யோகா ஆசனத்தில் அமர்ந்தேன். பிரமிட் சக்தி வேலை செய்ய ஆரம்பித்தது. தியானச் சூழல் தானாக அமைந்தது! ஓர் திடத்தன்மையும், உணர்வும் பெற்றேன்! சுலபமாகத் தியானம் செய்ய முடிந்தது. எல்லா வெளிக் குறுக்கீடுகளும், தடைகளும் தாமாக அகன்றன! 15 நிமிடம் முதல் ஒரு மணி நேரம் வரை தினசரி பிரமிடில் தியானம் செய்தேன் என்கிறார் ஜேம்ஸ்! பிரமிடின் அற்புத ஆற்றல் இதுவே!

# *பிரமிட் சக்தியின் பேராற்றல்* பிரிவு - ஆ பிரமிட் யுக்தியியல்*
# *(Pyramid Technology)*

# 6.பிரமிட் சக்தி

மனப்பெட்டகத்தைக் 'காலியாக' வைத்துக் கொண்டால்தான் அதில் 'சக்தியை' நிரப்பி வைத்துக்கொள்ள முடியும். மனதில் எண்ணங்கள் தேவையற்ற கவலைகள் நிரம்பி இருந்தால் நமக்குக் கிடைக்கும் 'பிரபஞ்ச' சக்தி வீணாகும். ( நிரம்பிய கலத்தில் கொட்டுவது வெளியே வழிவது போல ) ஆக 'வெறும்' மனது சக்தியை ஏற்றுக்கொண்டு நமது ஒவ்வொரு அசைவிற்கும் தேவைப்படும் 'சக்தியைச்' செலவழிக்கத் தயாராகும். சாதாரணமாக எண்ணமற்று உறங்கும்போது 'சக்தி' சேமிக்கப்படும். ஒவ்வொரு நாளும் தேவையான அளவு உறங்கி, விழித்தபின் அச்சக்தியைச் செலவழித்து செயல் புரிகிறோம். பிரமிட் உள்ளே இருக்கும் இடம் முழுவதும் 'பிரபஞ்ச சக்தி' நிரம்பி இருக்கிறது. பிரமிடின் விசேஷ கட்டமைப்பு பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் ஆற்றல் பெற்றதால் அபரிமிதமான சக்தி அங்கே நிரம்பி இருக்கும். வெட்டவெளி சக்தியைவிட பிரமிட் 'சக்தி இருப்பு' அதிகம். பிரமிட் உள்ளே சென்று தியானம் செய்து எண்ணமற்ற காலி மனதை நாம் தயார் செய்தால் அங்கிருக்கும் சக்தியை நாம் நிரப்பிக் கொள்ள முடியும்.

அடிப்படையில் வாழ்வு என்பதே ஒரு 'சக்தி கையாளும்' ( handling) செயல்பாடுதான். வாழும் உயிரினத்தை வாழ்ந்த உயிரினங்களில் இருந்து பிரித்துக் காட்டும் தன்மை என்பது மனித வாழ்வு, தன்னை உயிர்ப்புடன் வைத்துக்கொள்ள சக்தியை சரிவர உபயோகப்படுத்திக் கொள்கிறது என்பதுதான். செடி, கொடிகளும் பிரபஞ்ச சக்தியால்தான் வாழ்கிறது. ஆனால் அவைகளுக்கு 'சக்தியை' சரியாக நிர்வகிக்கத் தெரியாது. மனித வாழ்வு அப்படி அல்ல. பிரபஞ்சப் பேராற்றல் தரும் "பிராண" சக்தியை கிரகித்து மனிதன் தன் வாழ்வைப் பல வகையிலும் மேம்படுத்திக் கொள்கிறான். மற்ற உயிரினங்களுக்கு அவ்வளவாக இந்த ஆற்றல் இல்லை. மனிதன் இவ்வளவற்ற ஆற்றல் தரும் சக்தியைப் பல பெயர்களில் அழைக்கிறான். இந்துக்கள் அதை 'பிராணா' என்று அழைக்கின்றனர். சீனர்கள் அதை கீ (Gi) அல்லது 'சீ' ( Chi) என்று அழைக்கின்றனர். 'கீ' ( Ki) என்று ஜப்பானியர்களும், 95 வகை வெவ்வேறு பெயர்களால் 95 மற்ற கலாச்சாரங்களாலும் இச்சக்தி விதவிதமாக அழைக்கப்படுகிறது.

( Brennen 1958). இயற்கையிலேயே எல்லா வாழும் உயிரினங்களுக்கும் ஒரு 'சக்தி ஓட்டம்' உண்டு. அதை 'வாயு சக்தி வட்டக் களம்' அல்லது 'ஆரா' என்று அழைத்தனர். இன்றைக்கு நவீன யுகத்தில் விஞ்ஞானிகள் அந்த சக்தி ஓட்டத்தின் அளவை அறிய ஒரு கருவியை கண்டுபிடித்துள்ளனர். 'கிர்லியன் போட்டோகிராபி' என்று அழைக்கப்படும் அக்கருவியால் ஒருவருக்கு எவ்வளவு சக்திமிகு 'ஆரா' அமைந்துள்ளது என்று கண்டறிய முடியும். இதைக் கண்டறிந்தவர் செமியான் கிர்லியன் (Semyon Kirlian) என்பவர் ஆவார்.

இந்த வாழ்வுந்து சக்தி பிரமிட் அடியில் மேலும் விரிவடைகிறது அல்லது பெருக்கப்படுகிறது. ஏற்கனவே பிரமிடில் நிரம்பி இருக்கும் 'பிரபஞ்ச சக்தி'யும் பெருக்கச் செய்யும் ஆற்றலும் அங்கு உள் சென்று அமர்ந்து தியானம் செய்பவர் 'ஆரா'வை மேலும் வல்லமையாக்குகிறது. நாம் எல்லோரும் பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் வெவ்வேறு அளவு சக்திப் பெட்டகங்கள். பிரமிட் நமது சக்தியின் அளவை மேலும் பெருக்கிக் கொள்ள உதவும் கருவியாகச் செயல்பட்டு நம்மை நாமே மேம்படுத்திக் கொள்ள உதவுகிறது.

சென்ற நூற்றாண்டிலிருந்து விஞ்ஞானிகள் 'பிரமிட்' மீது தங்கள் கவனத்தைச் செலுத்திக் கவனித்து ஆராய்ந்து வருகிறார்கள். பிரமிட் உள்ளே வைக்கப்படும்போது பூக்கள் எப்படி வாடாமலும், அதிகப் பொலிவோடும் விளங்குகிறது என்பதையும், பழங்கள் எப்படிப் புதிதாகவும், அதிக சுவையுடனும் மாறுகிறது என்பதையும், இறந்த விலங்குகளின் உடல்கள் அழுகாமலும், துர்நாற்றம் அடிக்காமலும், அப்படியே வைத்தது வைத்தபடி உள்ளன என்பதைப் பற்றியும் வியந்து வியந்து நிரூபித்திருக்கிறார்கள்.

பலமுறை திரும்பத் திரும்பச் செய்யப்பட்ட உலக அளவிலான பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில், எல்லாவித வடிவ வாழ் உயிர்களும், பொருட்களும் பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட பிறகு புதிய வடிவப் பொலிவும், மேம்பட்ட செயல் திறனும், சீர்பட்ட நடத்தைத் திறனும், புதிய தோற்றப் பொலிவும் பெறுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே பிரமிட் சலிப்பையும், தளர்ச்சியையும், படபடப்பையும் போக்கி புத்துணர்வு தருகிறது, நோய்களைக் குணமாக்குகிறது என்பதையும் நிரூபித்துள்ளனர்.

கிர்லியன் போட்டோகிராஃபி யுக்தியானது சக்தியூட்டப்பட்ட உலோகத்தட்டில் வைக்கப்பட்டுள்ள ஃபிலிமில் புகைப்படக் கருவி செய்யப்பட்டு, 'வாழும் உயிர்கள் சக்திப் பெருக்கம் செய்வதையும், சக்தி எப்படி, எந்த அளவுக்கு ஈர்க்கப்படுகிறது' என்பதையும் படமாகப் பிடித்து விடும் ஆற்றல் பெற்றது.

' எட்கார் கெய்ஸியின் மறுபிறவி' ( The incarnation of Edgar Cayce ) என பெயரிடப்பட்ட புத்தகத்தில் "பிரமிட் சக்தி அளவிட முடியாதது, அளப்பரியது" என்று கூறப்பட்டுள்ளது. அதை எழுதியவர், வைன்ஃப்ரீ மற்றும் டேவிட் வில்காக் ( Wynn Free and David Wilcock). முற்றிலும் உண்மை! நமது பூமிக் கிரகம் தொடர்ந்து மின்காந்த சக்தி அலைகளை ஈர்த்தும், பரவவிட்டும் கொண்டிருக்கிறது. சிறிய கிரகங்கள் மின்காந்த சக்தியைத் தன்னைவிட பெரிய கோள்களின், கிரகங்களின் பெரிய சக்தியிலிருந்து பெற்றுத் தாமும் சக்திமிகு கிரகங்கள் ஆகின்றன. அப்படிப் பெறும் செயல் முறையில் கூம்பு வடிவக் கட்டுமானங்கள் (பிரமிடுகள்) வைக்கப்படும் பட்சத்தில் அவை மிக அதிக அளவு சக்தியை ஈர்க்கும் ஆற்றல் பெற்றவையாக விளங்குகின்றன. ஆக ஒன்றை (ஒரு மடங்கு சக்தியை) 100 மடங்காக மாற்றும் வல்லமை பெற்றவை பிரமிடுகள் எனலாம்.

# 7. பிரமிடுகள் எப்படி செயல்படுகின்றன

பொதுவாக பிரமிடுகள் சிறந்த மின் கடத்திகள். அதாவது அவை மற்ற சாதனங்களைவிட சக்தி இடப்பெயர்ச்சிக்கு அதிகம் உதவுகின்றன. மேலும் அதனுள் வைக்கப்படும் பொருள் எதுவாயினும் அதன் குணத்தன்மைகள் அதிகரிக்கும். இந்த தன்மையானது உள்ளே வைக்கப்படும் பொருளின் கூறுகளின் 'சக்தி ஆற்றலை' மேம்படுத்தி அந்தப் பொருட்களின் தரத்தையும், சிறப்பையும் பலமடங்கு அதிகமாக்கி விடுகின்றன. வைக்கப்படும் பொருள் யாதாயினும் சரி குணமேம்பாடு அடைவது நிச்சயம். உதாரணமாக, பிரமிட் உள்ளே ஒரு முகச்சவர பிளேடை (Blade)வைத்தால் அந்த பிளேடின் கூர்த்தன்மை கூறுகள் (பகுதிகள்) மேலும் கூர்மை அடைவதுடன் அந்த பிளேடு அதன் தேய்த்தன்மையை இழந்து மேலும் புதிதாகவும், கூராகவும் மாறிவிடும். அதாவது பிரமிட் அதனை புத்தம்புதியதாக மாற்றிவிடும் ஆற்றல் பெற்றது.

அதேபோலத்தான் ஒரு தியானி பிரமிட் உள்ளே சென்று தியானம் செய்யும்போது அவருக்கு வெகு விரைவில் 'வெற்று மனம்' ( எண்ணமற்ற மனம் ) ஏற்பட்டு பிரமிட் உள்ளே விரவிப் பரவிக் கிடக்கும் பிரபஞ்ச ஆற்றல் அந்த நபரின் மனதுள் நிரம்பிவிடும். அம்மனிதர் சக்தி மிக்கவர் ஆகிவிடுவார். ஆனால் உள்ளே அமரும் நபருக்கு எதிர்மறை எண்ண ஓட்டம் அதிகம் இருந்தால் அவரின் எதிர்மறை எண்ணப் போக்கு அதிகரிக்கும் அபாயமும் உண்டு. எனவே பிரமிட் உள்ளே தியானம் செய்யும் நபர் நேர்மறை எண்ணங்கள் கொண்டிருந்தாலும் எண்ணமற்ற நிலையில் அமர்ந்து தியானம் பயில வேண்டும். ஏனென்றால் பிரமிட் நல்லது அல்லது கெட்டது என்ற பாகுபாடின்றித் தனக்குள் எது வைக்கப்பட்டாலும் அதன் தன்மையை அதிகரித்துவிடும்.

***பிரமிடுக்குப் பின்னே நின்று செயல்படும் விஞ்ஞான**
**(ஆதாரம் : 'மனித வரலாற்றின் மேல் ஒரு ஆசானின் பிரதிபலிப்புகள்' பாகம்- 2 - ராம்தா)**

இப்புராதன பிரமிட் கட்டமைப்பின் பின்னே உள்ள விஞ்ஞானம் பிரமிப்பானது. பொதுவாக பிரமிடுகள் நேர் வடக்கு தெற்கு திசைகளில் (வட, தென் காந்தத் திசைகள் அல்ல) கட்டப்படுகின்றன. உண்மையான வடக்கு, தெற்கு திசை என்பது நிலையானது, பூகோள சம்பந்தமானது. இவை தாண்டி மின்காந்த சக்தி நிரம்பிய ஒரு சக்தி வெளி இதே வடதெற்கு திசைகளில் பரவி பூமியைச் சூழ்ந்து நிற்கிறது.

நமது பூமி சற்றே தூக்கிய ஒரு மின்காந்தச் சுழல் சுற்றிலுமுள்ள ஒரு வட்டம் தாண்டிய ஒரு ஒழுங்குமுறை இயக்கச் சுழற்சியாக அமர்த்தப்பட்டுள்ளது ( அது மின்காந்த வட திசை அல்ல ) சூரியனைச் சுற்றிவிடும் நமது பூமி 90° கோணத்தில் அல்லாத வேறு ஒரு 23.5° சாய்மான கோணத்தில் அமைந்து சுற்றி வருவது போல அமைந்துள்ளது. இந்த சாய்மானம் பருவ மாறுதல்கள் கொண்டதுடன் (Changing seasons) சூரியனைச் சுற்றும் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும்போது அபரிமிதமான சக்தி ஓட்டத்தைத் தருவதாகவும் அமைந்துள்ளது. பிரமிடுகள் நேர்வட திசையில் அமைக்கப்படும்போது அந்த சக்தியை உள்வாங்கித் தனக்குள் அமரும் நபருக்கு அல்லது தனக்குள் வைக்கப்படும் பொருளுக்குத் தருகிறது. பூமி சூரியனைச் சுற்றும் மற்றும் தன்னைத்தானே சுற்றும் இயல்பிற்கு ஏற்றவாறு இந்த சக்தி பெறுதலும், தருதலும் நடைபெறுகிறது.

# 8. பிரமிட் கட்டமைப்பு

நமது சொந்த உபயோகத்திற்கென பிரமிடுகள் அமைத்துக் கொள்ளப்படலாம். அவற்றை எப்படி அமைத்துக் கொள்வது என்று கற்கும் முன்னர் திரு. பில்ஷல் மற்றும் எட்பெட்டிட் ஆகியோரால் எழுதப்பட்ட 'பிரமிடின் சத்தி ரகசியம்' என்ற புத்தகத்தில் அவர்கள் கூறியுள்ள சில முக்கியமான கருத்துக்களை நாம் நினைவிற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

சிறிய மாதிரிப் பிரமிடுகள் கெட்டி அட்டை அல்லது மெல்லிய மரப்பட்டைகள் கொண்டு தயாரிக்கப்படலாம். சற்றே பெரிய பிரமிடுகள் கண்ணாடி, பிளாஸ்டிக், பைபர் கண்ணாடி ஆகியவற்றால் அமைக்கப்படலாம். கீழே ஒரு அளவுகோல் மாதிரி கொடுக்கப்பட்டுள்ளது. கவனத்துடன் படிக்கவும்.

*அனைத்தும் அடிகளில்*

1). அடித்தளம் 4
உயரம் 2.544
பக்கங்கள் 3.804

2). அடித்தளம் 6
உயரம் 3.816
பக்கங்கள் 5.706

3). அடித்தளம் 10
உயரம் 6.360
பக்கங்கள் 9.510

4). அடித்தளம் 15
உயரம் 9.540
பக்கங்கள் 14.265

5). அடித்தளம் 20
உயரம் 12.720
பக்கங்கள் 19.020

பொதுவாக பிரமிடின் ஒவ்வொரு அடி உயரத்திற்கும் அதன் அடித்தளம் 1.5723 அடியும், பக்கம் 1.4953 அடியும் அமைத்துக் கட்டுவது வழக்கம். உதாரணமாக 6 அடி உயர பிரமிடிற்கு 9.434 அடியிலான அடித்தளமும் 8.9717 அடி பக்கச்சுவர்களும் அமைத்துக் கட்ட வேண்டும். இந்த அளவுகளுடன் அதன் முக்கோணத்தின் கோணமும் 51° × 50' என்ற அளவில் இருக்க வேண்டும். மேலும் பிரமிடின் ஒரு முகம் பிரமிடின் உள்நோக்கி இருக்குமாறு அமைக்க வேண்டும். பிரமிடின் உள்ளே உள்ள மேற்கூறையில் ஒரு பெண்டுலத்தைக் கட்டித் தொங்க விட வேண்டும். இப்படி செய்து வைத்தால் அப்பெண்டுலம் முன்னும் பின்னும் அசைய ஏதுவாய் இருக்கும்.

பிரமிட் என்பது 4 சமமான முக்கோண பக்கங்கள் வைத்து கட்டப்படுவது. அவை நான்கும் ஒரு அடித்தளம் வைத்து அமைக்கப்படும். நான்கு முக்கோணங்களின் கூர்முனையும் ஒரு புள்ளியில் கூடி அங்கே ஒரு கூர்முனையை அமைக்கும். பிரமிடின் 4 அடித்தள அளவுகளும் 4 பக்க அளவுகளும் சமமாய் இருக்கும். பக்க அளவுகள் 0.951 × அடித்தளம் (base) என்பதற்குச் சமமாய் இருக்கும்.

பிரமிட் கட்டும்போது நாம் அடித்தளம் (base) மட்டும் தெரிந்து கொண்டால் போதும் மற்ற அளவுகளையும் அதே போல் சமமாக அமைத்து விடலாம். அதாவது (side, height and height of the King's chamber) பக்கம், உயரம், அரச அறை உயரம் போன்றவற்றின் அளவும் அறிந்துகொண்டு விடலாம்.

அரச அறை (kings chamber) என்பது பிரமிடின் உள்ளே அமைக்கப்பட வேண்டும். அடித்தளத்திலிருந்து 1/3 பங்கு உயரத்தில் அரச அறை அமைக்கப்பட வேண்டும். அரச அறையில் செய்யப்படும் தியானம் கூம்பிற்கு மிக அருகே இருப்பதால் அதிக அளவு ஆற்றல் பெறும். ஒரு பிரமிடின் அடித்தள அளவு சௌகரியத்திற்கு ஏற்றார்போல், தேவைக்கேற்ப தெரிவு செய்யப்படலாம்.

பக்கம் = 0.951 என்ற அளவை நாம் ஏற்படுத்திக் கொண்டு விட்டால் போதும் பிரமிடின் கோணம் 51°50' தானாக அமைந்து விடும்.

உயரம் = அடித்தளம் × 0.636.

அரச அறையின் உயரம் = H × 1/3 என்று இருக்க வேண்டும்.

உதாரணமாக : ஒரு பிரமிடின் அடித்தளம் 10.000 அடி என்று தீர்மானித்தோமானால் பக்கம் = 9.51 அடி. உயரம் = 6.360 அடி. அரச அறையின் உயரம் 2.12 அடி (அடித்தளத்தில் இருந்து) என்று அளவுகள் அமைந்திருக்கும்.

*__பிரமிட் பற்றி மேலும் சில தகவல்கள்__

பிரமிடை எந்த மூலப் பொருள் கொண்டும் அமைக்கலாம்.

காந்த காம்பஸ் உதவி கொண்டு வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்காக பிரமிடுகள் அமைக்கப்பட வேண்டும்.

பிரமிடின் அடித்தளம் 10 அடிகளுக்குள் இருந்தால் பிரமிடின் சுவர்களின் உயரம் 3 அடிக்குள் இருக்க வேண்டும். காற்றோட்டத்திற்கென சிறிய சன்னல்கள் தேவையான உயரத்தில் அமைத்துக் கொள்ளுதல் நலம்.

உள்ளே நுழைய உறுதியான இடத்தில் ஒரு கதவு அமைத்துக் கொள்ளலாம்.

பிரமிடின் உச்சியில் கிரிஸ்டல்கள் வைப்பது நோய் தீர்க்கும் வல்லமையை பெறும்.

பிரமிடின் விசேஷக் கட்டுமானம் அதை மிகவும் ஸ்திரமாக்குகிறது. அதன் ஸ்திரத்தன்மை காரணமாக கடும் புயவிலும், காற்றைச் சமாளிக்கும் திறன் பிரமிடுக்கு இயல்பாக அமைந்துள்ளது. சில நில அதிர்வுகளுக்கும் பிரமிடுகள் அசைவதில்லை. பக்கச் சுவர்களைவிட அதிக பரப்பளவு சதுர அடித்தளம் அமைந்திருப்பதால் புயல், நில அதிர்ச்சி இவற்றை பிரமிட் எளிதாக எதிர்கொள்ளும். பிரமிட் உள்ளே புவியீர்ப்பு விசை நிலத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதால் இயற்கைச் சீற்றங்களுக்குப் பிரமிட் பலியாவதில்லை.

பிரமிட் என்பது 4 சமமான முக்கோண பக்கங்கள் வைத்து கட்டப்படுவது. அவை நான்கும் ஒரு அடித்தளம் வைத்து அமைக்கப்படும். நான்கு முக்கோணங்களின் கூர்முனையும் ஒரு புள்ளியில் கூடி அங்கே ஒரு கூர்முனையை அமைக்கும். பிரமிடின் 4 அடித்தள அளவுகளும் 4 பக்க அளவுகளும் சமமாய் இருக்கும். பக்க அளவுகள் 0.951 × அடித்தளம் (base) என்பதற்குச் சமமாய் இருக்கும்.

பிரமிட் கட்டும்போது நாம் அடித்தளம் (base) மட்டும் தெரிந்து கொண்டால் போதும் மற்ற அளவுகளையும் அதே போல் சமமாக அமைத்து விடலாம். அதாவது (side, height and height of the King's chamber) பக்கம், உயரம், அரச அறை உயரம் போன்றவற்றின் அளவும் அறிந்துகொண்டு விடலாம்.

அரச அறை (kings chamber) என்பது பிரமிடின் உள்ளே அமைக்கப்பட வேண்டும். அடித்தளத்திலிருந்து 1/3 பங்கு உயரத்தில் அரச அறை அமைக்கப்பட வேண்டும். அரச அறையில் செய்யப்படும் தியானம் கூம்பிற்கு மிக அருகே இருப்பதால் அதிக அளவு ஆற்றல் பெறும். ஒரு பிரமிடின் அடித்தள அளவு சௌகரியத்திற்கு ஏற்றார்போல், தேவைக்கேற்ப தெரிவு செய்யப்படலாம்.

பக்கம் = 0.951 என்ற அளவை நாம் ஏற்படுத்திக் கொண்டு விட்டால் போதும் பிரமிடின் கோணம் 51°50' தானாக அமைந்து விடும்.

உயரம் = அடித்தளம் × 0.636.

அரச அறையின் உயரம் = H × 1/3 என்று இருக்க வேண்டும்.

உதாரணமாக : ஒரு பிரமிடின் அடித்தளம் 10.000 அடி என்று தீர்மானித்தோமானால் பக்கம் = 9.51 அடி. உயரம் = 6.360 அடி. அரச அறையின் உயரம் 2.12 அடி (அடித்தளத்தில் இருந்து) என்று அளவுகள் அமைந்திருக்கும்.

*பிரமிட் பற்றி மேலும் சில தகவல்கள்**

பிரமிடை எந்த மூலப் பொருள் கொண்டும் அமைக்கலாம்.

காந்த காம்பஸ் உதவி கொண்டு வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்காக பிரமிடுகள் அமைக்கப்பட வேண்டும்.

பிரமிடின் அடித்தளம் 10 அடிகளுக்குள் இருந்தால் பிரமிடின் சுவர்களின் உயரம் 3 அடிக்குள் இருக்க வேண்டும். காற்றோட்டத்திற்கென சிறிய சன்னல்கள் தேவையான உயரத்தில் அமைத்துக் கொள்ளுதல் நலம்.

உள்ளே நுழைய உறுதியான இடத்தில் ஒரு கதவு அமைத்துக் கொள்ளலாம்.

பிரமிடின் உச்சியில் கிரிஸ்டல்கள் வைப்பது நோய் தீர்க்கும் வல்லமையை பெறும்.

பிரமிடின் விசேஷக் கட்டுமானம் அதை மிகவும் ஸ்திரமாக்குகிறது. அதன் ஸ்திரத்தன்மை காரணமாக கடும் புயவிலும், காற்றைச் சமாளிக்கும் திறன் பிரமிடுக்கு இயல்பாக அமைந்துள்ளது. சில நில அதிர்வுகளுக்கும் பிரமிடுகள் அசைவதில்லை. பக்கச் சுவர்களைவிட அதிக பரப்பளவு சதுர அடித்தளம் அமைந்திருப்பதால் புயல், நில அதிர்ச்சி இவற்றை பிரமிட் எளிதாக எதிர்கொள்ளும். பிரமிட் உள்ளே புவியீர்ப்பு விசை நிலத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதால் இயற்கைச் சீற்றங்களுக்குப் பிரமிட் பலியாவதில்லை.

# *பிரமிட் சக்தியின் பேராற்றல்* *பிரிவு – 'இ'* *பிரமிட் பற்றி ஆசான்களின் கருத்துக்கள்* *'பிரமிட் சக்தி' பற்றி பிரம்மர்ஷி பத்ரிஜி*

பிரமிட் ஆன்மிக மன்ற இயக்கத்தின் 18 வழிகாட்டும் கொள்கைகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடமாக 'பிரமிட் சக்தி' விளங்குகிறது.

இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு (PSSM) முக்கிய காரணம் அதன் குறிக்கோள்தான். அந்த குறிக்கோள் என்னவென்றால் மனித குலத்தின் இன்றைய வாழ்வு முறை மாற்றப்பட்டு அது ஆன்மிக விஞ்ஞானத்தை உள்ளடக்கியதாய் இருந்து தனிமனித மற்றும் சமூக மேன்மைக்கு வழிகாட்ட வேண்டும் என்பதே. அதன் முழு நோக்கக் கூறுகள் கீழ்கண்ட லட்சியங்கள் அடங்கியது :

**1. பிரமிட் அடியில் அமர்ந்து தியானம் செய்வது.**

**2. ஒரு தியானி வேறு ஒருவருக்கு இந்த தியானத்தை எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது.**

பகவத் கீதையின் மிக முக்கியமான சுலோகம் *" கர்மன்யே வாதிகாராய் தே மா பலேஷூ கதாசனஹ'* என்பதாகும். அதாவது ஒருவன் தன்னுடைய கடமையை எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் "நிஷ்காம்ய கர்மமாகச்" செய்ய வேண்டும் என்பதே. தியானி எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு இந்த தியானத்தைக் கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு தியானிக்கான தலையாய கடமை அது!
(மனிதர்களாகிய) நாம் எல்லோருமே சக்திப் பெட்டகங்கள்! எல்லையற்ற சக்தியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்! நாம்தான் கடவுள்! வேத வாக்கியமும் இதையே 'தத் த்வம் அஸி' ( நீதான் அது) என்று கூறுகிறது. பிரமிட் சமூகத்தில் இதுவே தாரக மந்திரம் 'நீயே உனக்கு ஒளியாய் இரு', 'அப்போ தீபோ பவ' எனவே 'நாம் கடவுள்' என்று உணர்வதே நமது லட்சியம்.

***பிரமிட் பிரபஞ்ச ஆற்றலை குவித்துக் கொடுக்கிறது***

ஆம்! முற்றிலும் உண்மை! நாம் எங்கு வேண்டுமானாலும் அமர்ந்து, எப்போது வேண்டுமானாலும் தியானம் செய்யலாம்! தவறில்லை! ஆனால் பிரமிட் உள்ள தியானம் செய்யும்போது நாம் அதிக சக்தி ஆற்றல் பெறுகிறோம், பெற முடியும் என்பதுவும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்! ஏனென்றால் பிரமிட் ஒரு 'பூதக்கண்ணாடி' போல் சிறிய சக்தியை பல மடங்கு பெருக்கிக் காட்டும் ஆற்றல் மிக்கது! சூரிய ஒளி எங்கும் பரவிக் கிடக்கிறது! ஆனால் அதே சூரிய ஒளியை ஒரு பூதக்கண்ணாடி உதவியுடன் குவித்து ஒரு காகிதத்தின் மேல் செலுத்தும் போது அக்காகிதம் எரிந்து சாம்பலாகும் அளவிற்கு வெப்பம் பெருக்கப்படுகிறது.

அதைப்போல பிரமிட் சக்தியைக் குவித்துத் தரும் ஆற்றல் மிக்கது. பிரபஞ்ச சக்தி எங்கும் உள்ளது. ஆனால் அது குவிக்கப்பட்டு (பிரமிட் உள்ளே) அங்கு வைக்கப்படும் பொருள் மீது செலுத்தப்படும் போது அப்பொருள்/ அல்லது அந்த நபர் எல்லையற்ற சக்தி பெற முடியும்! பிரபஞ்ச சக்தியின் மூலம் பிரபஞ்ச பரப்பின் பிரிந்த உணர்வு நிலைதான்! அதேபோல் நமது பௌதிக உடலுக்கும் அதே பிரபஞ்ச சக்திதான் (பிராண வாயுவாக) செயலாற்றல் கொடுக்கிறது. பரவிக் கிடக்கும் பிரபஞ்ச சக்தியை திரட்டிக் குவித்துப் பல மடங்கு பெருக்கிக் கொடுக்கிறது பிரமிட்! எனவே நாம் பிரமிட் உள்ளே தியானிக்கும் போது வெளியே கிடைப்பதைவிட பன்மடங்கு ஆற்றல் பெறுகிறோம் என்பது நிரூபிக்கப்பட்ட ஆன்மிக விஞ்ஞான உண்மை!

' பிரமிட்' என்ற வார்த்தையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். பிர+மிட். பிர என்றால் நெருப்பு, 'மிட்' என்றால் 'நடுவே' சக்தி குவிக்கப்படும்போது, அதன் ஆற்றல் இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு அல்லது பன்மடங்கு அதிகரிக்கிறது. அதன் சக்தி ஆற்றல் விரிவாக்கம் பெறுகிறது. சக்தி மேலும் மேலும் குவியக் குவிய, அதிகரிக்க அதிகரிக்க அதன் சக்தி 'எரிசக்தி' ஆகிறது (சாதாரண வெயில் எரிக்கும் சக்தி ஆவது போல்) எனவே பிரமிட் உள்ளே அமர்ந்து தியானம் செய்யச் செய்ய, நம் மீது அதிக சக்தி பாயப் பாய நாமே ஒரு தீக்கோளம் போல் பேராற்றல் கொண்டவர் ஆகிறோம். 'பிர' நெருப்பு 'மிட்' நடுவே. நெருப்பின் நடுவே அமர்ந்து தியானம் செய்து நாமும் நெருப்பு போல் ஆகிறோம். இந்தக் குவிக்கப்பட்ட சக்தி அதன் உச்சபட்சத்தை அடைய பிரமிட் உண்மையாக வடதெற்காக அமைக்கப்பட வேண்டும். அதன் கோணம் 51 டிகிரியும் 50 நிமிடங்களும் (at the angle of 51degrees 50 minutes) பெற்றிருக்க வேண்டும்.

*வெளியே தியானிக்கையில் பிரமிடை மனக்கண்ணால் எண்ணி தியானிக்கலாம்*

நமது இருப்பிடத்திற்கு அருகே பிரமிட் இல்லாவிட்டால் நமது மனக்கண்ணால் பிரமிட் ஒன்றை கற்பனை செய்து அதன் அடியில் தியானம் செய்வது போல் மனப்பூர்வமாய் நினைத்துத் தியானம் செய்யலாம். எண்ணம் வலிவானது! உங்களுக்கு அப்பேராற்றல் கிடைக்கும்!

பிரமிட் ஒன்றை கட்டிக் கொள்ளலாம் அல்லது பிரமிட் தொப்பி அணிந்து கொள்ளலாம் அல்லது மரத்தாலான பிரமிட் ஒன்றை தொங்கவிட்டு அதன் அடியில் அமர்ந்து தியானம் செய்யலாம்! பிரமிட் கீழே உறங்கி புத்துணர்வு பெறலாம்! அது அத்தகைய ஆற்றல் உடையது!

ஒரு இரவு முழுவதும் ஒரு கொள்கலத்தில் நீர் நிரப்பி பிரமிட் அடியில் வைத்து மறுநாள் சக்தி நிரம்பிய தண்ணீரை நாம் அருந்தலாம். அதே போல் பழங்களையும் பிரமிட் அடியில் வைத்து அதிகச் சுவையான அதிகப் புத்தம் புதிய பழங்களாக உண்ணலாம். பிரமிடின் சக்தி அத்தகையது.

பில்ஷல் மற்றும் எட்பெட்டிட் எழுதிய "பிரமிடின் ரகசிய சக்தி" என்ற புத்தகம் படித்த பிறகு (1982ல்) நான் ( பத்ரிஜி) எனது தச்சரை அழைத்து மரத்தாலான இரண்டு பிரமிடுகள் செய்தேன். ஒரு பிரமிட் அடியில் ஒரு கத்திரிக்காயை வைத்தேன். வெளியே ஒரு காயை வைத்தேன். வெளியில் வைத்த கத்தரிக்காய் இரண்டே நாளில் வாடிப்போக பிரமிட் அடியில் வைத்த கத்தரிக்காய் 30 நாட்கள் புதிதாய் இருந்தது. அதேபோல் பிரமிட் அடியில் வைக்கப்பட்ட பிளேடு அதிகக் கூர்மை அடைந்து ஒரு மாதம் வரை பயனளித்தது.

***முதல் பிரமிட் மையம் - புத்தா பிரமிட், கர்னூல்***

முதன் முதலில் 1991 ஆம் வருடம் திரு பி.வி ரெட்டி அவர்கள் உதவியுடன் 'புத்தா பிரமிட்' கர்நூலில் நிர்மாணிக்கப்பட்டது. உள்ளே சுமார் 250 பேர் அமரக்கூடியது (அமர்ந்து தியானம் செய்ய ஏதுவாக) தியானம் செய்து தியான அனுபவங்கள் பெரும் வகையில் கட்டப்பட்டது.

தியானத்தில் மிக அதிகப் பலன் பெற பிரமிடின் அடித்தளத்தில் இருந்து 1/3 உயரத்தில் அமர்ந்து தியானிக்க வேண்டும் என கண்டறியப்பட்டது. 'கிங்ஸ் சேம்பர்' எனப்படும் அரசர் அறை அமைக்கப்பட்டது. அங்கு ஒரு பலகையிட்டு உறங்கினால் நமது சூட்சும சரீரமானது உடலினின்றும் வெளிப்பட்டுப் பல புதிய பல ஆன்மிக அனுபவங்களைப் பெறலாம்.

முதன் முதலில் இந்தியாவில் பிரமிட் தியான பலன் பற்றி பிரச்சாரம் செய்தவர் பரோடாவின் திரு. ஜிதேன்பத் ஆவார். அப்போதிலிருந்து பலர் பிரமிட் சக்திபற்றிப் பேசலாயினர். எவரும் பிரமிட் உள்ளே அமர்ந்து தியானம் செய்யலாம். பிரமிட் ஆன்மிக மன்றம் இதற்கெனவே தன்னை அர்ப்பணித்து மக்களை ஈர்த்து தியானம் செய்ய வைப்பதில் ஈடுபட்டுள்ளது. பிரமிட் என்பது விஞ்ஞானத்தின் பேரதிசயம்! வெளியே அமர்ந்து தியானம் செய்யும்போது 30 நிமிடங்களில் நமக்குக் கிடைக்கும் 'கவனம்' ( concentration ) பிரமிட் உள்ளே ஐந்து நிமிடங்களிலேயே கிடைத்து விடுகிறது.

*மனம் குவியல் - பிரமிடில் சுலபம்*

ஒரு பிரமிடை மேஜையின் மீது வைத்தால் மிக இயல்பாக நமது பார்வை அதன்மீது திரும்பும். நமது மனமும் அதை நோக்கிக் குவியும். அதாவது 'கவனச்சிதறல்' ஏற்படவே ஏற்படாமல் மனம் ஒருநிலைப்பட பிரமிட் உதவுகிறது. பிரமிடில் அமர்ந்து தியானம் செய்யச் செய்ய வெகு விரைவில் மனம் குவிதலும், எண்ணமற்ற மனமும் நமக்கு இயல்பாகவே வந்துவிடும். எங்கே சென்றாலும் மனதை இழுத்து வந்து கட்டி போடும் ஆற்றல் பிரமிடுக்கு உண்டு. இப்பிரமிட் தியானப் பழக்கம் நமது மனதில் அலைபாயும் தன்மையைக் குறைத்து, குறைத்தபின் இல்லாமலே செய்து விடும். எனவே வீட்டில் கண்ணில் படும்படியாக ஆங்காங்கே பிரமிட் வைக்கலாம்.

தியானம் செய்வதன் மூலமாக பூர்வ ஜென்ம தீய கர்ம வினைகளை நாம் போக்கிக் கொண்டு விடலாம் (தண்ணீரில் கழுவி அசுத்தங்களை நீக்குவது போல - தியானம் மன அழுக்குகளைக் கழுவிச் சுத்தம் செய்கிறது) பகவத் கீதை சொல்வது போல,

*"அபிசேதஸி பாப்பேப்ய சர்வேபய பாபக்ருத்தம*

*ஸர்வம் ஞானஎவேனைவ வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி"*

அதாவது பாவிகளிலேயே மோசமான பாவியாய் நீ இருந்தாலும் கூட ஒரு கீற்று ஞான ஒளியில் உன் அத்தனை பாவங்களும் கழுவப்பட்டு அடித்துச் செல்லப்படும். இந்த ஸ்லோகத்தைப் படித்ததினால் மட்டும் ஞானம் வந்து விடாது, விடாமல் தியானம் செய்தால் மட்டுமே ஞானம் வசப்படும்.

*எந்த ஒரு மூலப் பொருளிலும் பிரமிட் அமைக்கலாம்*

பிரமிடின் ஆற்றல் பற்றி உலகளவில் பலரால் அறியப்பட்டிருந்தும்கூட அப்பிரமிடை எந்த மூலப் பொருள் கொண்டு அமைப்பது என்ற ஐயம் சிலர் மனதில் ஏழலாம். சிலர் இரும்பால் பிரமிட் அமைக்கலாமா என்று கூட வியப்பதுண்டு! சிலருக்கு பிரமிட் உள்ளே மின்சக்தி கொடுக்கப்படலாமா? கூடாதா? என்ற ஐயப்பாடு! காற்றாடி பொருத்திக் கொள்ளலாமா? என்ற வினா. ஜன்னல்கள் உண்டா? என்ற கேள்வி. தாராளமாய்! நாம் எந்த உலோகத்திலும் பிரமிட் செய்து கொள்ளலாம்! மின் வசதி உண்டு! காற்றாடி உண்டு! ஜன்னல்களும் உண்டு. நமது விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம்.

ஆனால் கட்டமைப்புக் கோணம் (51° × 50') மிக மிக முக்கியம்! சாதாரணமாய் அறைகளின் கோணம் 90° அதைச் சற்றே மாற்றி ( 51° × 50') என்று ஆக்கினால் அது பிரமிட் ஆகிவிடும். மூலப்பொருள் எதுவாயினும் சரி பிரமிட் கட்ட உபயோகிக்கலாம்! ( மரம், கண்ணாடி, காகிதம்) பிரமிட் உள் உச்சியில் ஒரு கிரிஸ்டல் வைத்தல் மிக நல்லது; சக்தி பெருகும்! நாம் சூட்சும உடலுடன் பிரயாணம் செய்து 'வேறு உலகங்களுக்குள்' செல்லும்போது அங்கு பலவித பிரமிடுகளைக் கண்டு மகிழலாம். பல உலகங்களில் பல தொழில் நுட்பங்களும் உண்டு. ஆனால் எல்லா உலகங்களிலும் 'பிரமிட்' உண்டு.

***ஒவ்வொரு நகரிலும் பிரமிட் மையம்***

ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் பிரமிட் மையங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொதுப் பிரமிட் அமைக்கப்பட்டு எல்லோரும் அங்கு வந்து கூட்டு தியானம் செய்யலாம். சிறிய பிரமிடுகள் வீடுகளுக்கு உள்ளே தொங்க விடப்படலாம் (ஒருவர் அல்லது இருவர் தியானம் செய்யும் வகைகளில்) ஆனால் கூட்டு தியானம் அதிகப் பயன் தருவதால் பொதுப் பிரமிட் அமைத்து அங்கு சென்று கிராம மக்கள் கூட்டு தியானம் செய்வது மிக அவசியம்! அதேபோல் ஒவ்வொரு நகரத்திலும், பெருநகரிலும் பொதுப் பிரமிடுகள் அமைக்கப்பட்டு தியானம் நடைபெற வழி வகுத்தல் நலம்.

கர்நூலில் உண்மையில் 'கர்நூல் பிரமிட் மையம்' என்பதை PSSM ஏற்படுத்தியது. முதல் பிரமிட் தியான மையம் 'புத்தா பிரமிட் தியான மையம்தான்( வருடம் 1991 ). பிறகு 1996 ஆம் ஆண்டு அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள உரவகொண்டா என்னும் இடத்தில் இரண்டாவது பிரமிட் மையம் 'லோப்சங் ராம்ப்பா பிரமிட் ஆன்மிக தியான மையம்' கட்டப்பட்டது. அதன் பிறகு அதே அனந்தப்பூர் மாவட்டத்தில் ஆயிரம் பேர் அமர்ந்து தியானம் செய்யும் வகையில் ' அகத்திய பிரமிட் தியான மையம்' 1999 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பிறகு குண்டக்கல்லில் 'பவன புத்ர பிரமிட் ஆன்மிக மையம்' கட்டப்பட்டது. பிறகு கடப்பா மாவட்டத்தில் வேம்பள்ளியில் 'ஸ்ரீ வேதவியாச பிரமிட் ஆன்மிக மன்றம்' கட்டப்பட்டது.

இந்த PSSM அமைப்புகளின் தலைமையகம் பெங்களூருவில் அகில உலக பிரமிட் பள்ளத்தாக்கு மையம் (The Pyramid Valley International) என்று உள்ளது. அந்தப் பெயர் (மைத்ரேய புத்தா பிரமிட்' என்பதாகும். ஒரே சமயம் ஐயாயிரம் பேர் அமர்ந்து தியானம் செய்யும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது. இன்று இந்த நாட்டில் (ஏன் பூமியில் என்று கூடச் சொல்லலாம்) மிகவும் சக்தி வாய்ந்த பிரமிட் தியான மையமாக பெங்களூரு மைத்திரேயா பிரமிட் தியான மையம் அமைந்துள்ளது.

இன்றைக்கு உலக அளவில் பல ஆசான்களின் கடின முயற்சியால் நூற்றுக்கணக்கான பிரமிடுகள் தியானத்திற்கெனவே கட்டப்பட்டுள்ளன. 100 பெரிய பிரமிடுகள் 50 லிருந்து ஆயிரம் பேர் அமர்ந்து தியானம் செய்யும் வகையில் இந்தியாவின் பல நகரங்களிலும் பிரமிடுகள் கட்டப்பட்டுள்ளன. அங்கே செய்யப்படும் கூட்டு தியானத்தால் அபரிமிதமான ஆற்றல் உண்டாக்குகிறது. இதைத் தவிர ஐயாயிரத்திற்கும் மேல் கூரைமேல் பிரமிடுகள் அமைக்கப்பட்ட தனிநபர் வீடுகளும் உண்டு. அங்கே தியானக் கூடங்களும் உண்டு. இது தவிர பிரமிட் ஆன்மிக மற்றும் பல பெரிய பிரமிட் கட்டிடங்களையும் கட்டி ஆங்காங்கே மக்கள் கூட்டம் கூட்டமாக கூட்டு தியானம் செய்து குறைந்த காலத்தில் இவ்வுலகில் சக்தி ஆற்றலை மேம்படுத்தும் வகையில் வழி செய்துள்ளது.

இன்றைக்கு இப்படி இப்போது நாம் பெற்றிருக்கும் விழிப்புணர்ச்சியும், ஆன்மிக வளர்ச்சியும்விட அதிகம் பெற பிரமிடுகள் வழி வகுக்கப் போகின்றன வரும் காலத்தில்! எனவே நாம் விஞ்ஞான ரீதியாகப் பல வகைத் தியான முயற்சிகளை மேற்கொண்டு பிரமிட் தியான மையங்கள் மூலம் ஆன்மிகப் புரட்சியை ஏற்படுத்துவோமாக!

**டோலோரஸ் கெனானின் ( Dolores Cannon) கருத்துக்கள் - பிரமிடின் இரகசிய சக்தி***

இன்றைக்கு உலகில் இருக்கும் முக்கிய ஆன்மிக விஞ்ஞானிகளுள் 'டோலோரஸ் கெனான்' என்பவர் மிக முக்கியமானவர். மனோவசியக் கலைஞர்; முன்ஜென்ம வாழ்வறியும் ஆற்றல் பெற்றவர்; நோயை குணமாக்கும் சக்தி படைத்தவர்; நல்ல ஆலோசகர் என்ற பன்முகத்தன்மை பெற்ற டொலோரஸ் 40 வயதிற்குள் தனது வெவ்வேறு நோக்கப் பயணங்களின் மூலம் ஒரு பரந்துபட்ட அறிவைச் சம்பாதித்து வைத்திருப்பவர். சிறந்த மனோவசியக் கலைஞரான இவர் தனது பலதரப்பட்ட வாடிக்கையாளர்களை மனோவசியம் செய்து அவர்களின் வேறு உலக அனுபவங்கள், பூமி தாண்டிய வேறு கிரக அனுபவங்கள், மாறுபட்ட விண் உலக அனுபவங்கள், வேறு உயிர்களில் வாழ்ந்த வாழ்வனுபவங்கள் பற்றிக் கேட்டறிந்து பரந்துபட்ட அனுபவ அறிவு வாய்க்கப் பெற்றவர். டோலொரஸ் வேறு உலகங்கள், UFO's, அட்லாண்டிஸ், எகிப்து போன்ற இடங்களுக்குச் சென்றும், சென்று வந்தவர்களைக் கேட்டறிந்தும் மிகமிக ஆழமான அறிவு கொண்டிருப்பவர்.

தான் கஷ்டப்பட்டுச் சேர்த்த அறிவையும், ஞானத்தையும் நேர்மறை எண்ணப் போக்குள்ள, நம்பிக்கை உள்ள, முன்னேறும் அல்லது மேம்படும் எண்ணப்போக்குடைய ஆன்மிகத் தேடல் தாகமுள்ள உலகளாவிய நல்லவர்களோடு பகிர்ந்து கொண்டு வந்துள்ளார் ( சத்சங்கம் ). அம்மாதிரியான ஆன்மிகத் தாகம் கொண்ட நல்லவர்கள்தான் பில் ( Phil), க்ளாரா ( Clara) மற்றும் பிரிண்டா ( Brenda ) ஆகியோர். அவர்கள் தமது பிரமிட் சம்பந்தமான விசித்திர அனுபவங்களை டோலொரசுடன் பகிர்ந்து கொள்ள, அவற்றை டோலொரஸ் நம்முடன் இங்கே பகிர்ந்து கொள்கிறார். அவருடைய "சிக்கலான பிரபஞ்சம்" என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகள் நமக்காக:

***டோலோரஸ் எகிப்தின் பிரமிடுகளை யார் கட்டினார்கள்? எதற்காக?**

*பில் ( Phil ) முந்தைய தலைமுறை நாகரிக வளர்ச்சியின் சின்னமாகத் திகழும் பிரமிட், அதை இன்றைய நாகரிக வளர்ச்சியாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிக் கட்டப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் (monument) எனக் கொள்ளலாம். அவர்கள் பெற்ற வெற்றிகளின் ஒரு மதிப்பீட்டு அளவுகோல் அல்லது அவர்களின் சாதனை மதிப்பீட்டுச் சின்னம், அவர்கள் உண்மையின் இயல்பைப் புரிந்து கொண்டதன் ஒரு குறைவற்ற நிறைவாக அடையலாம் என எப்படி வேண்டுமானாலும் அல்லது அத்தனையும் சேர்த்தடங்கிய ஒன்று எனவும் கொள்ளலாம்.

***டோலோரஸ் தென் அமெரிக்கப் பிரமிடுகள் பற்றி என்ன கருத்து ? அவையும் எகிப்திய பிரமிடுகளும் ஒரே மாதிரியானவையா?**

*பில் ஆம்! அட்லாண்டிசிலிருந்து அது வீழ்ந்த காலத்தே இடம்பெயர்ந்து வந்த மக்கள் கட்டியவைதாம் தென் அமெரிக்க பிரமிடுகள். கட்டும் முறை, அமைப்பு எல்லாமே அட்லாண்டிஸ் மக்களின் பொதுவான அறிவே! ஒன்றே!

***டோலோரஸ் இவை எல்லாமே ஒரே முறையில் கட்டப்பட்டவையா?**

*பில் பிரமிட் கட்டமைப்பில் பெருகிய பல கட்டிடங்களின் பொருளை விளக்குவது மிகக் கடினம்! ஆனால் அவ்வளர்ச்சி ஒரு ஆரம்ப நிலை முதிர்வின்மையில் இருந்து நிறைவான பூரணத்துவத்தைப் பெற்றதென்னவோ உண்மைதான்! மதத் துறவிகளின் "முதிர்வு" (maturity) மனநிலை பொறுத்து, அவர்களின் விரிந்து பரந்த அறிவுத் தெளிவு பொறுத்து, பிரமிட் வளர்ச்சியும் இருந்தது. சாதாரண குடிமகனால் செய்ய முடியாதது இது!

பல வருடப் படிப்பும், ஒரு முகப்பட்ட சிந்தையும், முயற்சியும் கொண்டு செய்யப்பட்ட சாதனை இது! தொடர்ந்து பல வருடங்கள் இடைவிடாது கற்றுத் தெளிந்த வெகுசில அறிஞர்களின் சாதனை இது!

***டோலோரஸ் பண்டைய எகிப்து மன்னர்களின் (இறந்தபின் கட்டப்படும்) சமாதி இவை என கூறப்படுகிறதே!**

*பிரிண்டா ( Brenda) அந்தப் பழைய நாகரீகங்கள் மறைந்து பின்னர் எதற்காக இவை கட்டப்பட்டன என்றும், இவை யாவை என்ற அறிவும் இழந்த நிலையில் கேட்பவர்களுக்கு ஏதேனும் பதில் தந்தாக வேண்டுமே என்ற பதைப்பில் இட்டுக்கட்டப்பட்ட கதைகள். 'சமாதி' என்ற சமாளிப்பு அப்போதுதான் இடம் பெற்றது. அதுவும் சில நூற்றாண்டுகளாக!

***டோலரஸ் அப்படியானால் 'உயிரற்ற உடல்கள் எவையும் இங்கு இல்லையா?**

*பிரிண்டா எந்த மன்னரும் அங்கு புதைக்கப்படவில்லை.

*டோலோரஸ் அப்படியானால் அங்கிருந்த அறைகள் எதற்காக?

*பிரிண்டா 'சமாதி' என்று சொன்னதை விடச் சிக்கலான பதில் தர வேண்டி வரும். அந்த அறைகளில் சில கிடைக்கும் 'சக்தியை' மாற்றம் செய்வதற்காகக் கட்டப்பட்டவை! மற்ற பெரும்பாலான அறைகள் ஏதேதோ கணக்கிடப்பட்டுப் பல கணிதக் கண்டுபிடிப்புகளின் (அவர்கள் அறிந்த அளவில்) பெட்டகமாகவும் '' கணக்குகள்' வைத்தும், அந்த அந்தப் பிரமிட் அளவு தொடர்பான விஷயங்களுக்காகவும் கட்டப்பட்டவை.

டோலோரஸ் எண்களும், கணக்குகளும் அந்தப் பிரமிட்களிலேயே ரகசியமாய் வைக்கப்பட்டிருந்தன என எனக்குச் சொல்லப்பட்டது.

*பிரிண்டா ஆம்! அது சரியே! முக்கியமாக எகிப்து பிரமிடுகள் மூன்றும் சிறியதாகத் திட்டமிடப்பட்டு கட்டப்பட்டன. அங்கு இருக்கக்கூடிய அளவுகளும், கோணங்களும் பற்றிய அறிவு அதாவது ஒரு கூர்முனையில் இருந்து மற்றோர் கூர்முனை அளவுகள் (Apex to Apex) பற்றிய விவரங்கள்! அதைப் பற்றி என்னவெல்லாம் நமக்குக் 'கனவுகள்' உண்டோ அத்தனையும் பற்றிய விவரங்கள்! அந்நாளையை நாகரீகத்தின் அளவீடுகள், மதிப்பீடுகள் எல்லாம்! இன்னைக்கு நீங்கள் சிந்தித்துகூடப் பார்க்காத கோணங்களில் எல்லாம் அவர்கள் போட்டு வைத்த கணக்கீடுகள் அவை! அந்த நாகரிகத்தின் அத்தனை 'விஞ்ஞான அறிவையும்' தன்னுள்ளே கொண்டிருந்தன அந்தப் பிரமிடுகள் என்று சொன்னால் அது மிகை அல்ல!

டோலோரஸ் நான் பெரு (Peru) மற்றும் மெக்சிகோவின் பிரமிடுகளை சற்றே நினைத்துப் பார்க்கிறேன். பெரும் கற்களால் கட்டப்பட்டவை! எவ்வாறு அப்படி கற்களை செதுக்கிக் கட்டினார்கள்! மிக ஆச்சரியமான நினைவுச் சின்னங்கள் அவை!

*கிளாரா நட்சத்திரங்கள் மீதும், கோள்களின் மீதும் பிரபஞ்ச சக்தி கொண்டு நாம் எவ்வளவோ படைக்கிறோம்! அதைப் போலவே அந்தப் பிரமிட் கற்கள் உருவாக்கப்பட்டவை! அந்தப் பகுதி மூலப்பொருட்கள் வைத்தே அவை உருவாக்கப்பட்டு இருக்கலாம்! ஆனால் எதையும் உருவாக்க நாம் சில பொருட்களை சக்தியால் உருவாக்கச் செய்து பிறகு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கும். ஆனால் பிரமிடை பொறுத்தவரை அவை அங்கே கிடைத்த பொருட்களை வைத்து அங்கேயே கட்டப்பட்டவை! பல நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்கும் பிரமிடுகள் பார்த்தவருக்கெல்லாம் குழப்பம் தரும் ஆச்சரியமாக விளங்குகிறது! இன்றைக்கு நாம் கூட உபயோகிக்காத மூளைத்திறனை உபயோகித்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அப்படி ஆச்சரியமாக பிரமிடுகள் கட்டிய விந்தையை என்னவென்று சொல்வது? கற்களைப் பெயர்த்து, துண்டுகளாக்கி, தாம் நினைத்த வடிவத்தில், கட்டிடக்கலையில் தேர்ந்த நிபுணர்கள் போல பிரமிடுகள் கட்டியது இன்றைக்கும் விளங்காத பேரதிசயம்தான்!

டோலோரஸ் அன்றைய எகிப்து பிரமிடுகள் கட்டப்பட்ட விதங்கள் குறித்து பல கருத்துக்கள் நிலவுகின்றன! அது சம்பந்தமாய் ஏதேனும் தகவல்கள் தர முடியுமா உங்களால் ?

*பில் மிகப்பெரிய சக்தியின் துணையுடன்தான் இவை கட்டப்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு அந்த நுட்பங்கள் நம்மால் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் இன்றைக்கிருக்கும் தொழில்நுட்பமும் வசதிகளும் இல்லாத அந்தக் காலத்தில் அப்பெரும் கற்களை எப்படி நகர்த்தி, எப்படி மேலே கொண்டு சென்று எப்படித்தான் கட்டினார்களோ என்ற வினாவிற்கு ஒரே பதில்தான்! அவர்களின் பிரமிக்கத்தக்க 'மனோசக்தி' மட்டும்தான்! மனோசக்தி! முடிக்க வேண்டும் என்ற விளைவு, சிரத்தை இவை தவிர வேறு காரணங்கள் எனக்குத் தென்படவில்லை !

இன்றைக்கு இவ்வளவு வசதிகள் இருக்கின்றன, எதுவும் சாத்தியம்! அன்றைக்கு? அவர்களின் திடமான மனோசக்தியும், ஆற்றலும்தான்! அட்லாண்டிசிலிருந்து பெறப்பட்ட அறிவையும், நுட்பங்களையும் வைத்துக்கொண்டு சில குருமார்கள் பெரும் முயற்சி செய்து (ஐந்து முதல் ஏழு வரை குருமார்கள்) இந்தக் கலை பயின்று வல்லுனர்களாகிப் பின்னர் கட்டியவை இப்பிரமிடுகள்! அட்லாண்டிசின் அறிவுப் பரிசு இந்த பிரமிடுகள் எனலாம்!

எங்கோ கிடைத்த கற்களைத் துண்டுகளாக்கி, ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு வந்து இத்தனையும் செய்தது அவர்களின் 'டெலிபதி' ( telepathy communication by means other than senses - புலன் அறிவிற்கு அப்பாற்பட்ட சக்தி மூலம்) அந்த சக்திமிகு குருமார்கள் தங்கள் டெலிபதி ஆற்றல் கொண்டு கற்கள் இருக்கும் இடம் கண்டுபிடித்து, கற்களைத் தாம் விரும்பிய அளவிற்குத் துண்டுகள் செய்து, அவற்றைத் தம் புலன் அறிவிற்கு அப்பாற்பட்ட சக்தியினால் நகர்த்தி ... அப்பப்பா! இந்தப் பிரமிடுகள் மயன் மாளிகைபோல் மனதால் உருவாக்கப்பட்ட நிஜக் கட்டிடங்கள்! கைகளால் கட்டப்பட்டதன்று! வெறும் கைகளால் இப்படிக் கட்டவும் முடியாது! அந்த சக்திமிகு குருமார்கள் தாங்கள் எப்படி மனதால் உருவாக்கிய தேர்களில் பயணித்தார்களோ, அப்படியே இந்தக் கற்களையும் மனதால் உருவாக்கிய யுத்திகளில் ஏற்றித் தாம் விரும்பும் இடங்களுக்குக் கொண்டு வந்தனர் எனலாம்!

இனம் தெரியா, பெயரிடப்பட முடியாப் பேராற்றலால் அக்கற்கள் இடம் பெயர்க்கப்பட்டுக் கட்டப்படும் இடங்களுக்குக் கொண்டுவரப்பட்டு பிரமிடுகள் கட்டப்பட்டன! அத்தனையும் மனோசக்தி! மனோசக்தி! அந்த ஒவ்வொரு கல்லிலும் அபரிமிதமான சக்தி குவிக்கப்பட்டிருந்தது. அந்த சக்திமிகு கற்களால் கட்டப்பட்ட பிரமிடும் சக்தியை அபரிமிதமாய் அள்ளித்தந்தது! சக்திமிகு கிரிஸ்டல்கள் போல செயல்பட்டன அந்த கற்கள்!

டோலோரஸ் அன்றைய எகிப்து பிரமிடுகள் கட்டப்பட்ட விதங்கள் குறித்து பல கருத்துக்கள் நிலவுகின்றன! அது சம்பந்தமாய் ஏதேனும் தகவல்கள் தர முடியுமா உங்களால் ?

*பில் மிகப்பெரிய சக்தியின் துணையுடன்தான் இவை கட்டப்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு அந்த நுட்பங்கள் நம்மால் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் இன்றைக்கிருக்கும் தொழில்நுட்பமும் வசதிகளும் இல்லாத அந்தக் காலத்தில் அப்பெரும் கற்களை எப்படி நகர்த்தி, எப்படி மேலே கொண்டு சென்று எப்படித்தான் கட்டினார்களோ என்ற வினாவிற்கு ஒரே பதில்தான்! அவர்களின் பிரமிக்கத்தக்க 'மனோசக்தி' மட்டும்தான்! மனோசக்தி! முடிக்க வேண்டும் என்ற விளைவு, சிரத்தை இவை தவிர வேறு காரணங்கள் எனக்குத் தென்படவில்லை !

இன்றைக்கு இவ்வளவு வசதிகள் இருக்கின்றன, எதுவும் சாத்தியம்! அன்றைக்கு? அவர்களின் திடமான மனோசக்தியும், ஆற்றலும்தான்! அட்லாண்டிசிலிருந்து பெறப்பட்ட அறிவையும், நுட்பங்களையும் வைத்துக்கொண்டு சில குருமார்கள் பெரும் முயற்சி செய்து (ஐந்து முதல் ஏழு வரை குருமார்கள்) இந்தக் கலை பயின்று வல்லுனர்களாகிப் பின்னர் கட்டியவை இப்பிரமிடுகள்! அட்லாண்டிசின் அறிவுப் பரிசு இந்த பிரமிடுகள் எனலாம்!

எங்கோ கிடைத்த கற்களைத் துண்டுகளாக்கி, ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு வந்து இத்தனையும் செய்தது அவர்களின் 'டெலிபதி' ( telepathy communication by means other than senses - புலன் அறிவிற்கு அப்பாற்பட்ட சக்தி மூலம்) அந்த சக்திமிகு குருமார்கள் தங்கள் டெலிபதி ஆற்றல் கொண்டு கற்கள் இருக்கும் இடம் கண்டுபிடித்து, கற்களைத் தாம் விரும்பிய அளவிற்குத் துண்டுகள் செய்து, அவற்றைத் தம் புலன் அறிவிற்கு அப்பாற்பட்ட சக்தியினால் நகர்த்தி ... அப்பப்பா! இந்தப் பிரமிடுகள் மயன் மாளிகைபோல் மனதால் உருவாக்கப்பட்ட நிஜக் கட்டிடங்கள்! கைகளால் கட்டப்பட்டதன்று! வெறும் கைகளால் இப்படிக் கட்டவும் முடியாது! அந்த சக்திமிகு குருமார்கள் தாங்கள் எப்படி மனதால் உருவாக்கிய தேர்களில் பயணித்தார்களோ, அப்படியே இந்தக் கற்களையும் மனதால் உருவாக்கிய யுத்திகளில் ஏற்றித் தாம் விரும்பும் இடங்களுக்குக் கொண்டு வந்தனர் எனலாம்!

இனம் தெரியா, பெயரிடப்பட முடியாப் பேராற்றலால் அக்கற்கள் இடம் பெயர்க்கப்பட்டுக் கட்டப்படும் இடங்களுக்குக் கொண்டுவரப்பட்டு பிரமிடுகள் கட்டப்பட்டன! அத்தனையும் மனோசக்தி! மனோசக்தி! அந்த ஒவ்வொரு கல்லிலும் அபரிமிதமான சக்தி குவிக்கப்பட்டிருந்தது. அந்த சக்திமிகு கற்களால் கட்டப்பட்ட பிரமிடும் சக்தியை அபரிமிதமாய் அள்ளித்தந்தது! சக்திமிகு கிரிஸ்டல்கள் போல செயல்பட்டன அந்த கற்கள்!

டோலோரஸ் ஆம், நான் பார்த்திருக்கிறேன்! அந்தக் கற்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்டிருக்கும். எந்தவித பசையோ, இணைக்கும் சிமெண்டோ இல்லாமல் அவ்வளவு சரியாய்ப் பொருத்தப்பட்டு வெவ்வேறு வளைவு நெளிவுகளோடு அடுக்கப்பட்டு, கட்டப்பட்டு, உறுதியாய் எழும்பின பிரமிடுகள்! ஆச்சரியம், ஆனால் உண்மை!
*கிளாரா ஆம்! எல்லாம் 'டெலிபதி' (புலன்களுக்கு அப்பாற்பட்ட மனோ சக்தி)யால் செய்யப்பட்டன! வெறும் எண்ணங்கள்! ஆனால் வலிமைமிகு எண்ணங்கள்! எண்ணம்தான் எல்லா செயலுக்கும் காரணம்! பிரமிட் போல் ஒரு எண்ணம்! அதன் வடிவமைப்பு ஏற்பாடு ஒரு எண்ணம்! திட்டமிடுதல் ஒரு எண்ணம்! மூலப்பொருட்கள் உண்டாக்குவது ஒரு எண்ணம்! பொருட்களை மனோரதத்தில் ஏற்றி கட்ட வேண்டிய இடம் கொண்டு வந்து சேர்த்தல் ஒரு எண்ணம்! வேறு வேறு வடிவங்களில் உள்ளவற்றைக் குறை இல்லாமல் பிசிர் இல்லாமல் இடத்திற்குத் தகுந்தபடி விருப்பத்திற்குத் தகுந்தபடி இணைத்தல் ஒரு எண்ணம்! இப்படி எண்ணி, எண்ணி எண்ணியதை முடித்தனர் அக்குருமார்கள்! அவர்களின் எண்ணங்களின் சக்தி ஆற்றல் பிரமிக்கத்தக்கது! எண்ண வலைகளால் பின்னப்பட்ட எண்ணம் போல் வடிவம் தரப்பட்ட எண்ணக் கட்டிடங்கள் பிரமிடுகள் எனலாம்!
***டோலோரஸ் சிலர் சில கதிர் ஆற்றல் உதவிகளால் இவை கட்டப்பட்டன என்று அபிப்பிராயப்படுகின்றனரே?**
*கிளாரா எண்ணத்தை விட வலிமையான 'கதிர்வீச்சு' உண்டா என்ன? ஒவ்வொரு கல்லும் ஒரு எண்ணம்! பல எண்ணக் கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட பலமிக்க எண்ண அடித்தளம்! இப்படிப் பல பிரமிடுகள் கட்ட பல ஆயிரக்கணக்கான எண்ணங்கள்! எண்ணமே செயல் வடிவம் பெறும் என்பதற்கேற்ப நினைத்து நினைத்தே நினைத்ததைச் சாதித்தனர் அவர்கள்! இப்படி உருவாக்கிய பிரமிடுகள் இன்று 'எண்ண வலிமையை' உலகிற்குக் காட்டும் உதாரணங்களாய் நிற்கின்றன!
*டோலோரஸ் அக்கற்கள் ஒன்றின் மேல் ஒன்றாய் எப்படி அடுக்கப்பட்டன? (எந்தவித இயந்திரத் துணையுமின்றி) பிரமிப்பாய் உள்ளதே!
*கிளாரா எண்ணம்தான்! கற்களை உருவாக்கியபின் "இந்தக் கற்கள் ஒன்றின் மேல் ஒன்றாக, இப்படி, அப்படி அடுக்கப்பட வேண்டும் என்று எண்ணுகிறேன், அப்படியே மந்திரம் போல் நடக்கிறது! அதோ அந்த மூலையில் ஒன்று, இந்த இடத்தில் இரண்டு ஒட்டிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன்! அதுவே நடக்கிறது! பல சக்திமான்கள் ஒன்றுகூடி, ஒன்றுபோல் நினைத்து, நினைத்து ஒன்றாய் நின்று கட்டிய "மனோ சக்திக் கட்டிடங்கள்தாம்" நாம் இன்று காணும் பிரமிடுகள்! எண்ணம் விதையாயிற்று; பின் விருட்சமாயிற்று! கற்பனை நிஜமானது! எண்ணம் செயலானது! ஒரு வாழும் உயிரோ, பொருளோ, நபரோ எல்லாம் பல அணுக்கூறுகளின் இணைந்த வடிவம்தானே! சக்திச் சேமிப்புதானே! பிரபஞ்ச அணுக்கூறுகள் ஒன்றாய் சேர்ந்து ஒரு பொருள் உண்டாகிகிறது! அது அணுவாய் இருக்கும் போது கண்களுக்குத் தெரிவதில்லை! ஆனால் பொருளாகும்போது ஒரு வடிவமாகத் தென்படுகிறது! எல்லாமே பிரபஞ்ச வானம்தான்! எல்லாமே சக்திமிகு அணுக்கூட்டம்தான்!

***டோலோரஸ் பொருட்களின் தன்மை கெடாமல் பாதுகாக்கும் சக்தி பிரமிடுக்கு உண்டு என்கிறார்களே, அது பற்றிக் கூறுங்கள்!**

பில் மனித உடலால் கடக்க முடியாத, மனித அனுபவத்தால் பெற முடியாத சக்தி பிரமிடுக்கு உண்டு! மனிதனால் பெற முடியாத சக்தியை பிரமிடுகள் பெற்றுச் சேமித்த, தனது உள்ளே வருகிற, வைக்கப்படுகிற பொருளுக்கோ, மனிதனுக்கோ தருகிறது. (நதியின் நீரை பாட்டிலில் பிடித்து தாகமாய் இருக்கும் மனிதன் பயன்படுத்துவது போல) மனிதன் தன் இயலாமைக்கு ஒரு மாற்று வழியாய் பிரமிடைப் பயன்படுத்திக் கொள்கிறான். எந்தவித பொருளும் பிரமிடில் வைக்கப்பட்டு சக்தி ஏற்றப்பட்டுப் பின் மனிதனால் பயன்படுத்திக் கொள்ள எதுவாய் உதவுகிறது பிரமிட். சக்தி ஊட்டப்பட்ட கிரிஸ்டல்கள் போல பிரமிடுகளும் வேலை செய்கின்றன. சக்திக்கு கிரிஸ்டல்களை அணிந்து மனிதன் சக்தி பெறுவது போல பிரமிட் உள்ளே அமர்ந்தும் சக்தி பெறலாம்.

மனித சக்தியை அபரிமிதமாய் மனிதர்களுக்கே தருகிறது பிரமிட் என்றால் மிகை அல்ல. பூமியில் பிரமிட் போல மனிதருக்குச் சக்தி ஆற்றல் தரும் சாதனம் வேறு ஒன்றும் இல்லை எனலாம்.

பிரமிடுக்கு உள்ளே நுழையும் ஒருவர் 'சக்தி களத்தில்' ( Energy Field) மனித சக்தி குவிக்கப்பட்ட ஒரு தளத்தில் சென்றடைந்து சக்தி பெறுகிறார் என்பதே உண்மை. எல்லையற்ற மனோ சக்தி கொண்ட குருமார்களால் எண்ணத்தின் வலிமை கொண்டு உருவாக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்ட பிரமிட் தன் உள்ளே வரும் ஒவ்வொரு மனிதனுக்கும், பொருளுக்கும் தன் சக்தியை வாரி வாரித் தருகிறது. அந்த மகா குருமார்களின் எல்லையற்ற மனோ சக்தி ஒவ்வொரு பிரமிட் உள்ளேயும் விரவிப் பரவிக் கிடக்கிறது. நதி நிறைய நீர்! (ஆன்மிக) தாகம் கொண்டவர்களே! அள்ளி அள்ளி குடிக்கலாம், வாருங்கள்!

# 11. பிரமிடின் அதிசய சக்தி – ஓஷோ*

பிரமிடின் படங்களை நீங்கள் பார்த்து இருக்கலாம். எகிப்தின் பிரமிடுகள் மிகுந்த சக்தி வாய்ந்த மகான்களால் கட்டப்பட்டவை. பிரமிட் என்ற சொல்லிற்கு 'அக்னியை உள்ளடக்கியது' என்று பொருள்.
பிரமிட் கட்டுவதன் முக்கிய நோக்கம் சக்தியை ஈர்ப்பதுதான். அதன் முக்கோணத்தன்மை 'சக்தியை' ஈர்க்கிறது. வெளியில் அமர்ந்து இருக்கும்போது வராத புதிய எண்ணங்கள் பிரமிடிற்குள் அமர்ந்தவுடன் வரலாம். பிரமிடுகள் அந்த விசேஷ, விசித்திர கட்டமைப்பே உங்களுக்கு 'தெய்வீகத்தை' எழுப்பலாம். அது தெய்வீக அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. பிரமிடை உண்டாக்கியவர்கள் நல்ல தீர்க்கதரிசிகள் (எதிர்காலத்தை மனக்கண்ணால் காணும் ஆற்றல் பெற்றவர்கள்) நம்மால் காண முடியாதவற்றைக் காணும் ஆற்றல் பெற்றவர்கள் அவர்கள் எனலாம்.

*ஏன் பிரமிடுகள் கட்டப்பட்டன ?*
முந்தைய நாகரிகத்தில் பிரமிடுகள் "புனித யாத்திரை ஸ்தளங்களாகக்" கருதப்பட்டன. அதன் முக்கியமான அம்சம் பிரமிடுக்குள் இருட்டாக இருக்கும். சுமார் 10,000 - 20,000 ஆண்டுகளுக்கு முன்பு அவை கட்டப்பட்ட போது மின்சார வசதி ஏதுமில்லை. பிரமிட் உள்ளே செல்ல, வெளியே வர நெருப்புப் பந்தங்கள உபயோகித்திருக்க வேண்டும். ஆனால் பிரமிடின் உட்சுவர்களிலோ, உட்கூரையிலோ எந்தவித புகை அடையாளங்களையோ கருப்புக் கரைகளையோ காண முடியவில்லை. பிரமிடின் உட்பாதைகள் நீளமாகவும், வளைந்ததாகவும், திருப்பங்கள் கொண்டதாகவும், இருட்டாகவும் உள்ளன. உள்ளே விளக்குகள் வைப்பதற்கான இடங்களோ அல்லது வைத்ததற்கான அடையாளங்களோ மின்சார ஏற்பாடுகளோ எதுவுமில்லை. தீப்பந்தங்களோ, எண்ணெய்க் கறையோ விளக்கின் நெய்க் கரையோ தீப்பந்த மாடங்களோ ஏதேனும் இருந்திருக்க வேண்டும் அல்லவா? ஆனால் எதுவும் இல்லை! அப்படியானால் இருட்டாக இருக்கும் பிரமிடின் உள்ளே அவர்கள் புழங்கியது எப்படி என்ற ஐயப்பாடு நமக்குள்ளே வருகிறது. சரி! உள்ளேயே வரத் தேவையில்லை எனும் பட்சத்தில் அத்தனை நெளிவு சுழிவான பாதைகள் ஏன்? உள்ளே பல படிகள், அமரும் இடங்கள், சன்னல்கள், கதவுகள் எல்லாம் உண்டு. உள்ளே வெளிச்சம் இல்லாத போது இவை எல்லாம் எதற்காக அமைக்கப்பட்டன? பகலில் மட்டும் புழக்கம் இருந்ததா? ஆனால் இவை சில உற்சாகமான மன்னர்களுக்காக பிரத்தியேகமாகமாய்க் கட்டப்பட்ட வாழ்விடங்கள் என்றும் நம்பப்படுகிறது.

இந்தக் களத்தில் (பிரமிட் பற்றிய தகவல்) பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. சில முக்கியமான வினாக்கள்:

**1. பிரமிடுகள் எதற்காக கட்டப்பட்டன?**

**2. அதன் நோக்கம், லட்சியம் என்ன?**

**3. ஒரு தரிசு நிலத்தில் ஏன் இப்படி மிகப்பெரிய கட்டிடங்களைக் கட்டி வைத்தார்கள்?**

**4. அதற்கு எவ்வளவு செலவாகியது?**

**5. எத்தனை பேர் கட்டுமானப் பணியில் ஈடுபட்டார்கள்?**

**6. வெறும் இறந்த உடல்களைப் பாதுகாக்க இத்தனை சிரமம் மேற்கொள்ளப்பட்டதா?**

**ஆம் என்றால் இவ்வளவு பணமும், மனித உழைப்பும் வீணன்றோ?**

ஆனால் அது அப்படி இல்லை! ஆன்மிக வளர்ச்சிக்காக, மலர்ச்சிக்காக, பல காலம் நின்று பயன்தரத்தக்க வகையில் கட்டப்பட்டவை அவை (கோவில்கள் போல்) நாம் ஒவ்வொருவருமே அவரவர் 'உள்ளொளி' பற்றி ஆழ்ந்து ஆராய்ந்தோம் என்றால் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து உள்ளொளி என்று நம்மைச் சுற்றி ஒளிவட்டம் ஒன்றை படம் பிடித்துக் காட்டும். அன்றைக்கும் அப்படி ஒளிமிகு 'ஆரா' படைத்தவர்கள் இருந்திருக்க வேண்டும்! அவர்கள் இருளுக்குள் அதாவது பிரமிட் உள்ளே செல்கையில் அந்த ஆறா ஒளி அவர்களுக்கு வழிகாட்டியிருக்க வேண்டும். எனவேதான் உள்ளே 'வெளிச்சமிச்சங்கள்' ஏதுமில்லை! அவர்களின் 'ஆரா' ஒளியே, அறிவொளியே, ஞான ஒளியே விளக்குகளாகச் செயல்படுகையில் தனி விளக்குகள் எதற்கு என்று நோக்கில் உள்ளே அவர்கள் விளக்குகள் ஏதும் பயன்படுத்தவில்லை! இதுவே சரி! இதுதான் நடந்தது!

விஞ்ஞானிகள் ஆச்சரியப்படுவது என்னவென்றால், பிரமிட் பகுதியின் சுற்றுவட்டாரத்தில் எங்குமே நகர்த்தக்கூடிய கற்கள் எதுவும் இல்லை என்பதுதான். கட்டப்பட்ட பிரமிடுகளின் வெகு தொலைவில் அந்தக் கற்கள் இருந்தன! எப்படி அந்தக் கடினமான கற்கள் பிரமிட் கட்டும் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டன என்பதே ஒரு புரியாத புதிராக விளங்குகிறது. அந்தக் காலத்தில் பளுதூக்கிகளும் இல்லை எனும்போது மிக ஆச்சரியமாக உள்ளது!

மனிதர்கள் அடுக்கி வைத்த கற்கள் என்பது தவிர வேறு இயந்திர நுட்பங்கள் ஏதும் பயன்படுத்தியதற்கான ஆதாரங்களும் இல்லை! அதுவும்கூட அடுக்கி வைத்த நேர்த்தியும் குறையில்லாத முழுமை வடிவமும் (அதுவும் கூர் வடிவ பிரமிட் வடிவில்) பார்த்தால் அந்தப் பிரமிடை அமைத்தவர்களின் கூர் மதியும் அசாதாரணமான நிபுணத்துவமும் நன்கு விளங்குகிறது.

ஆக எகிப்திய பிரமிடுகளின் கட்டமைப்பு, அவைகளின் சூழல், அவைகளின் வினோத வடிவம், முக அமைப்பு இவற்றைப் பார்த்தால் ஏதோ முக்கியமான லட்சியத்திற்கெனக் கட்டப்பட்டவை என்பது சொல்லாமலே விளங்குகிறது. பிரமிடின் அதிசய சக்தி, குணமாற்றும் திறன் இவை எல்லாம் நன்கு அறிந்திருந்த மகா ஆசான்களாலேயே அவைகள் கட்டப்பட்டன என்பதுவும் விளங்கும்.

உண்மையில் அப்பிரமிடுகள் கட்டுவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட கற்கள் இன்றைய பளுதூக்கிகளால்கூடத் தூக்க முடியாத அளவுக்குக் கடினமாக இருப்பது இன்னொரு ஆச்சரியமான ஆனால் உண்மையான அதிசயம்! அவ்வளவு கனமான கற்கள் தூக்கப்பட்டு, அடுக்கப்பட்டு காலத்திற்கும் அழியாத அதிசயங்களாய் நிற்பது அதைவிட அதிசயம்! அவ்வாறே வேலையும் மனிதர்களால் செய்யப்பட்டவை என்பதும் வியப்பே! ஏதோ ஒரு இதுவரை நாம் பார்த்தறியாத சாதனம் இருந்திருக்க வேண்டும்! அல்ல மகா வல்லமை பொருந்திய நான்காம் நிலை உடல் படைத்தவர்களாய் அம்மனிதர்கள் (Fourth state bodies) இருந்திருக்க வேண்டும்! ஆக புராதன எகிப்தியர்கள் ஏதோ விசேஷ சக்தி பெற்றுத்தான் இவற்றை அமைத்திருக்க முடியும் என்பதுவும் திண்ணம்!

***மர்மமான ஆனால் சுவையான உண்மைக் கதை* ( Mysterious Anecdote )**

1990 ஆம் வருட ஆரம்பத்தில் பிரமிட் ஆராய்ச்சியின்போது பிரமிட் உள்ளே சென்ற ஒரு ஆராய்ச்சியாளர் திடீரென காணாமல் போனார். மற்றவர்கள் விளக்குகளை வைத்துக்கொண்டு அவரை தீவிரமாகத் தேட ஆரம்பித்தனர். 24 மணி நேரத்திற்கு மேலாக தேடியும் அவரைக் கண்டுபிடிக்க இயலவில்லை. பிறகு அடுத்த நாள் காலை சுமார் 2 மணி அளவில் திடீரென அந்த மனிதர் ஒரு பைத்தியக்காரனைப் போல உள்ளிருந்து ஓடி வந்தார். சிறிது நேரம் கழித்து அவரே தன்னுடைய விசித்திரமான அனுபவம்பற்றிக் கூற ஆரம்பித்தார். அதாவது இருட்டில் அவர் வெளியே வருவதற்கான வழியை தேடிக் கொண்டிருக்கும்போது சுவற்றில் ஒரு கதவை கண்டார். வெளிவாசல் வழியென நினைத்து உள்ளே நுழைந்தார்.

நுழைந்தபின் திரும்பிப் பார்த்தால் கதவு திடீரென தானாக மூடிக்கொண்டு விட்டது. "நான் திரும்பிப் பார்த்தேன்! சுவற்றில் கதவே இல்லை! மேலிருந்து ஒரு கல் தானாக சரிந்து விழுந்து, நான் வந்த வழியை மூடி விட்டதை உணர்ந்தேன். உதவிக்கு வருமாறு உரக்கக் கத்தினேன். யாருக்கும் கேட்கவில்லை! எப்படி வெளிவருவது என்று இருட்டில் நான் பட்ட பாட்டை விவரிப்பது மிகக் கடினம்" என்றார்.

***விசேஷ அனுபவங்களுக்கனவே அமைக்கப்பட்டது போன்ற பிரமிடின் உள்கட்டமைப்பு***

(Construction of Pyramid interiors for special experience )

புதிய அதிசய உணர்வுக்கெனவே கட்டப்பட்டது போன்று பிரமிடின் உள்ளே அறைகளும், கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன! பிரமிடின் ஒவ்வொரு நுணுக்க வடிவம் விசேஷ பிரத்தியேக அனுபவத்திற்கெனவே கட்டப்பட்டு இருந்தது! உயரக் குறைவான ஒரு அறையில் நீங்கள் குனிந்தே சென்றாலும்கூட திடீரென உங்கள் தலையை யாரோ பிடித்து அழுத்துவதுபோன்ற அனுபவமும், நீங்களே தடுக்கிப் போனது போன்ற அனுபவமும் ஏற்படும்! உண்மையில் யாரும் உங்களை அழுத்தவில்லை! மேற்கூரைகூட உங்கள் தலைமீது படவில்லை என்ற நிதர்சனமாய் தெரிந்து கொண்டாலும்கூட யாரோ அழுத்துவது போன்ற அனுபவம் உங்களுக்கு நிகழும்! அதேபோன்று உயரக்கூரை உள்ள வேறு ஒரு அறையில் நீங்கள் நுழையும் போது நீங்களே விரிவடைந்தது போன்ற புது அனுபவம் உங்களுக்கு நிகழும். முக்கியமாக தியானத்திற்கென இதே போல் ஒரு அறையை நீங்கள் கட்டிக் கொண்டால், அற்புத தியான அனுபவம் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உண்டு. இப்படி " உள்விரிதல் அல்லது சுருங்கிப்போதல் " அனுபவம் ஏற்பட்டால் உயர்ந்த தியானம் உங்களுக்குக் கிட்டும். அத்தியான அக்றைக்கென பிரத்தியேக வண்ணம், மணம், ஒலியமைப்பு ஆகியவற்றை நீங்கள் தெரிவு செய்து கொள்ளலாம்.

***பிரமிடின் உள்ளே தியானம் வெகு எளிது!***

வெளியில் செய்வதைவிட பிரமிட் உள்ளே 'ஆழ்நிலை தியானம்' எளிதில் வசப்படும் என்பது ஆச்சரியமான உண்மை! குறைந்த அளவு உணவு, தண்ணீர் போதும். உணவு எடுத்துக் கொள்ளாமலும்கூட நீங்கள் அதிக நேரம் பிரமிடுக்குள் தியானம் செய்ய முடியும். வெளியே இருப்பதைவிட பிரமிட் உள்ளே உங்களுக்கு 'சக்தி துய்த்தல்' சொற்பமாக ( Consumption of energy) இருக்கும்! இவ்வளவு ஏன்? ஒரு உடலைவிட்டு ஆன்மா வெளியேறிய பிறகும்கூட எந்தவித பாதிப்புமின்றி அந்த உயிரற்ற உடல் அப்படியே பிரமிட் உள்ளே இருக்கும்!

ராமகிருஷ்ண பரமஹம்சரது வாழ்வில் சுவையான சம்பவம் அடிக்கடி நிகழும்! அதாவது அவர் ஆழ்ந்து தியானம் செய்வார்! சில சமயங்களில் ஆறு நாட்கள் வரை கண்கள் திறக்காமல், உணவு, நீர் இல்லாமல் தியானம் செய்வார்! அப்போது பார்த்தால் அவரது பௌதிக உடல் சுருங்க ஆரம்பிக்கும். அவரது சீடர்கள் மசாஜ் செய்து மறுபடி சுருங்கிய உடலை விரிவாக்குவர்! அப்படியின்றி மறுபடி அவரது 'சமாதி நிலையிலிருந்து' அவரால் மீண்டு வர முடியாது! ரத்த ஓட்டமும், உடல் இயக்கமும் இன்றி மரத்துப்போகும் அவரது உடல்! மசாஜ் செய்தபிறகு எப்போதும்போல் அவர் ஆவார்! அதே தியானத்தை அவர் மட்டும் பிரமிடின் உள்ளே செய்திருந்தாரென்றால் மசாஜ் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல், ரத்த ஓட்டம் பாதிக்கப்படாமல், உடல் சூடு குறைந்து மரத்துப்போகாமல் அவரால் 'சமாதி நிலை'யில் தொடர்ந்து இருந்து பின் வெளிவந்திருக்க முடியும்! ஏனெனில் பிரமிடின் உயிர் ஆற்றல் அத்தகையது!

*பிரமிடின் பாதுகாக்கும் ஆற்றல்*

5000 ஆண்டுகளுக்கும் மேலாக பிரமிட் உள்ளே இறந்த உடல்கள் எந்தவித பாதிப்புமின்றி பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது (இன்றுவரை) அவை எல்லாமே சாதாரண மனித உடல்கள்தாம்! நேற்றுதான் இருந்தாற்போல, குளிர்சாதன பெட்டியில் வைத்தார்போன்ற புதிதாய் கிடக்கும் அந்த இறந்த உடல்களைப் பார்க்கும்போது மிக மிக ஒழுங்கான ஒரு பாதுகாப்பு நிலை உணரப்படும்போது, எந்தவித பாதுகாப்புத் திரவங்களும் உபயோகப்படுத்தப்படவில்லை என்ற உண்மை உணரும்போது நமக்கு பிரமிப்பான வியப்பே ஏற்படுகிறது! புரியாத புதிர்தான்! பிரமிடின் விசேஷக் கட்டமைப்பும் ஒரு காரணமாக இருக்கலாம்! இறந்த உடல் என்றில்லை! பிரமிடின் உள்ளே எப்பொருள் வைக்கப்பட்டாலும் அது புத்தம் புதிதாய் பொலிவோடு பாதுகாக்கப்படுகிறது!

சூரிய ஒளிக் கற்றைகளைப் பிரமிட் உள்ளே செலுத்தும் (பிரமிட் உள்ளே) ஆற்றல் பெற்றதால் மிக மிக ஆச்சரியகரமான நிகழ்வுகள் நிகழ்கின்றன!

ஒரு சமயம் ஒரு ஆராய்ச்சியாளர் (கிசா பிரமிடுக்குள்ளே) பிரமிடின் உள்ளே சென்று ஏதோ ஆய்வு வேலை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அவர் அறியாமல் ஒரு நாய் உள்ளே நுழைந்து விட்டிருக்கிறது. அவர் அதை அறியாமல் பிரமிடின் கதவை சாத்திக் கொண்டு வந்து விட்டார். பின்னர் மூன்று வாரங்கள் கழித்து அவர் மறுபடி அங்கு செல்ல முடிந்தது. கதவைத் திறந்தால் உள்ளே உயிரற்ற நாயின் உடலைக் கண்டார்! ஆனால் புத்தம் புதிய உடலோடு எந்தவித பாதிப்புமின்றி, துர்நாற்றமின்றி அந்த நாயின் உடல் அங்கே கிடந்தது! பிரமிடின் விசேஷ கட்டமைப்பே இதற்குக் காரணம்!

செக்கோஸ்லோவிய விஞ்ஞானி திரு. கார்ல் ட்ரபல் (Karl Drbal) பிரமிடின் இந்த பாதுகாக்கும் திறன் பற்றிச் சிந்தித்தார். பிரமிடின் 'உள் அழுத்த நிலை' கூட ஒரு காரணமாக இருக்கலாம் என்று நினைத்தார். முகச்சவரம் செய்து கொள்ளும் பிளேடு ஒன்றை அட்டைப் பிரமிட் ஒன்று (Cardboard Pyramid) செய்து அதற்குள் வைத்துப் பார்த்து ஆராய்ந்தார். அவை பழைய, ஏற்கனவே பலமுறை உபயோகப்படுத்தப்பட்ட பிளேடுகள்.

சில மணி நேரத்திற்குப் பிறகு அவற்றை எடுத்து மிக ஆச்சரியமான முறையில் அவை மேலும் கூர்மையடைந்து இன்னமும் பலமுறை உபயோகிக்கும் அளவிற்குப் புதிதாக மாறிவிட்டிருந்தன. இதற்கென அவர் காப்புரிமை ஒப்புதல்கூட பெற்றார். ஒரு பிரமிட் வைத்து (அட்டை பிரமிட்) நாம் அதற்குள் ஆயுள் முழுவதற்கும் ஒரே பிளேடு வைத்து உபயோகப்படுத்த முடியும் என்பது வியப்பான உண்மை! ஒரு முகச்சவர பிளேடையே ஆயுள் முழுமைக்கும் கூர்படுத்த பிரமிடால் இயலும் என்றால் உள்ளே சென்று அமர்ந்து தியானம் செய்தால் நமது 'மூளை' எவ்வளவு கூர்மை அடையும் என்று சற்றே யோசித்துப் பாருங்கள்! ஏன் முடியாது? நிச்சயம் நமது புத்திக் கூர்மை பெறும்!

***நவீன பிரமிடுகள் ( Modern Pyramids )***

தற்போது சந்தையில் பிளாஸ்டிக் அல்லது கண்ணாடிப் பிரமிடுகள் விலைக்குக் கிடைக்கின்றன. ஆரோக்கியம் தேடும் மக்கள் அப்படி ஒரு பிரமிடை வாங்கி அதனுள் அமர்ந்து தியானம் செய்து வந்தால் பெரும் பயன் பெறலாம். அதன் அளவோ, கடினத்தன்மையோ, இழுபடும் தன்மையோ பொருட்டில்லை. நீங்கள் எங்கே சென்றாலும் அதையும் கொண்டு செல்லத் தக்கதாய் இருந்தால் போதும்! அதை ஒரு கூடாரமாகக்கூட நீங்கள் செய்து கொள்ளலாம்! ஒரு வித்தியாசமான உபயோகமான விளைவை அதன் தொடர் பயன்பாட்டில் நீங்கள் உணரலாம்! பிரமிடை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் நீங்கள் உங்கள் ஆயுட்காலத்தை நீட்டித்துக் கொள்ளலாம்! ஒவ்வொரு வீட்டிலும், அலுவலகத்திலும், பள்ளியிலும், மற்ற இடங்களிலும் பிரமிடுகளை ஒன்றே ஒன்று உபயோகத்திற்கென கட்டப்பட்டால் போதும்! நமது ஆயுட்காலத்தை 300 வருடங்கள்கூட நீட்டித்துக் கொள்ளலாம்! பிரமிட் உள்ளே தினசரி ஒரு மணி நேரம் தியானம் செய்தால் போதும் நமக்கு ஆரோக்கியமான வாழ்வு கிட்டும் என்பது உறுதி.

கார்ல் ட்ரபல் ( Karl Drbal) ஒரு செக்கோஸ்லோவிய ஆராய்ச்சியாளர். முகச்சவர பிளேடை ( Blade ) நீடித்த ஆயுட்காலக் கூர்மழுங்காத உபயோகக் கண்டுபிடிப்பிற்கான 'காப்புரிமை' எண். 91304 பெற்றவர்.

***எகிப்திய பிரமிடு உள்ளே ஓர் இரவு - என் நேரடி அனுபவங்கள்***

***பால் பிரண்டன் ( Paul Brunton)***

டாக்டர் பால் பிரண்டன் (1898 - 1981)ஒரு பிரிட்டிஷ் தத்துவ ஞானி, புதிர் மனிதர், ஒரு யாத்ரீகர்! தமது ஆன்மிக ஈடுபாட்டால் உலகம் முழுவதும் தேடித்தேடி ஞானிகள், புதிர் மனிதர்களைச் சந்தித்தும், கிழக்கத்திய மேற்கத்திய தத்துவப் பாடங்கள் கற்றும், மத குருமார்கள், சன்நியாசிகள் பலரைச் சந்தித்தும் பரந்துபட்ட விசாலமான ஞானம் பெற்றவர். தேடித் தேடி அலைந்து கடைசியில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின்பால் ஈர்க்கப்பட்டவர்.

பின்னாட்களில் ரமணரின் உபதேசங்களை உலகப் பார்வைக்கு (புத்தகங்கள் மூலமாக) வைத்தவர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு! அவர் " ரகசிய எகிப்தில் ஒரு தேடல் " (A Search in Secret Egypt) என்ற புத்தகம் எழுதியுள்ளார். ஒரு முழு இரவும் அரசர் அறை ( Kings Chamber) எனப்படும் (எகிப்திய பிரமிட் உள்ளே) இடத்தில் தங்கி அன்றைய இரவின் அவரது அனுபவங்களை ஒரு புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். தியானம் செய்வதற்கு உகந்த எத்தகைய தெய்வீகமான தெரிவு பிரமிட் என்பதையும், எப்படி பிரமிட் ஒரு 'சக்தியூட்டி' என்பதையும் அவர் அப்புத்தகத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.அப்புத்தகத்திலிருந்து இதோ உங்களுக்காகச் சில பகுதிகள்! படித்து அற்புத பரவசம் நீங்களும் பெறுங்கள்!

( **இனி அவரது வார்த்தைகளில்...)**

***அரசர் அறையில் கண்ணால் காணவியலா மகா சக்தி***

" நான் அரசர் அறை என்ற முக்கியமான இடத்திற்குள் நுழைந்தேன்! அன்றைய இரவு முழுவதும் அங்கேயே இருக்கத் தீர்மானித்தேன்! தியான நிலையில்! நிதானமாய் தளர்நிலையில் அமர்ந்தேன்! உள்ளே கும்மிருட்டாய் இருந்தது! எனக்கு என்ன நிகழப் போகிறது என்பதை அறிய மிக ஆர்வமாய் இருந்தேன்! சிறிது நேரம் கழித்து என்னைத் தவிர வேறு ஒரு கண்களுக்குப் புலப்படாத மறை சக்தி அங்கே உழவுவதாய் உணர்ந்தேன்! ஆனாலும் அமைதியாகக் காத்திருந்தேன்! எல்லா எண்ணங்களையும் நிறுத்தி தியானம் மூலம் என் மனதை வெறுமையாக்கி வைத்திருந்தேன்! நிசப்தமோ நிசப்தம்! ஆனாலும் உள் உணர்வால் வேறு ஒரு அமானுஷ்ய சக்தியை உணர்ந்தேன்! சாதாரணமான கூர்மதி நுட்பம் வாய்ந்தவர்கள் இந்த 'மறை சக்தியை' எளிதாக உணர்வார்கள்! நானும் அப்படியே! (அதுவும் புராதனமான இடங்களில்) என்னைச் சுற்றி ஏதோ ஓர் ஆன்மாவின் நடமாட்டத்தை நன்கு உணர்ந்தேன்! திடீரெனக் கண்விழித்தேன்!

***என்னையே சரண் கொடுத்தேன்***

மறுபடி சில நிமிடங்கள் கழித்து இரண்டாம் முறையாக, புதிதாகத் தியானம் செய்ய ஆரம்பித்தேன். அந்த 'இறந்தது போன்ற நிசப்தத்திற்கு' என்னையே சரணாகதி செய்து கொண்டேன்! அந்த வினோத அறையின் நிறமற்ற ஆழ்ந்த இருண்ட மௌனத்திற்குள் புகுந்தேன். முழுவதும் என்னைச் சூழலுக்கு ஒப்புவிக்கும் ஆத்மதாகத்தோடு காத்திருந்தேன்! ஆச்சரியம் கொண்ட காத்திருத்தல் அது! விசித்திரமான வினோத சூழலில் என்னைத் தாக்கிய, ஏதோ உணர்வுகளைப் பிராண்டும் அனுபவம் கொண்டேன்! வெறும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத வினோத அனுபவம் அது! நான் எதையுமே பார்க்காமல் ஏதோ என்னை யாரோ பார்த்துக் கொண்டிருப்பதாய் உணர்ந்தேன்!

***என்னையே சரண் கொடுத்தேன்***

மறுபடி சில நிமிடங்கள் கழித்து இரண்டாம் முறையாக, புதிதாகத் தியானம் செய்ய ஆரம்பித்தேன். அந்த 'இறந்தது போன்ற நிசப்தத்திற்கு' என்னையே சரணாகதி செய்து கொண்டேன்! அந்த வினோத அறையின் நிறமற்ற ஆழ்ந்த இருண்ட மௌனத்திற்குள் புகுந்தேன். முழுவதும் என்னைச் சூழலுக்கு ஒப்புவிக்கும் ஆத்மதாகத்தோடு காத்திருந்தேன்! ஆச்சரியம் கொண்ட காத்திருத்தல் அது! விசித்திரமான வினோத சூழலில் என்னைத் தாக்கிய, ஏதோ உணர்வுகளைப் பிராண்டும் அனுபவம் கொண்டேன்! வெறும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத வினோத அனுபவம் அது! நான் எதையுமே பார்க்காமல் ஏதோ என்னை யாரோ பார்த்துக் கொண்டிருப்பதாய் உணர்ந்தேன்!

***எதிர்மறை சக்தி உணர்தல்***
அந்தச் சூழலின் தொடர் அதிர்வுகள், சப்தங்கள், லேசான ஒளிக்கீற்றுகள் எல்லாமே எனக்குப் புதிதாக இருந்தன! புதிராகவும் இருந்தன! என்னைச் சூழ்ந்திருந்த அந்தக் கனமான பேசாமல் மௌன மொழி பேசிக்கொல்லும், உயிர்ப்பிக்கும் அந்த அனுபவ உணர்தலில் இருந்து கஷ்டப்பட்டு என்னை மறுபடி மீட்டேன். தியானத்தில் கவனம் செலுத்தினேன்! ஆனாலும் ஏதோ தீய சக்தியின் அருகாமை உணர்ந்தேன்! அது அந்த இடத்தையே நிரப்புவதாய் உணர்ந்தேன்! என் தொடர்பின்றும் எப்படி அதை நீக்குவது என்று கற்றிருந்ததால் மறுபடி மறுபடி அதன் பிடியிலிருந்து விடுபட முயற்சித்தேன்! சில நிழலான உருவப் புழக்கங்களை உணர முடிந்தது! யாரோ நடமாடுகிற உணர்வு ஏற்பட்டது!
திடீரென அவை என் முகத்தருகே நெருங்குவது போன்ற நெருக்கடி உணர்ந்தேன்! ஏதோ தீயது நடக்க இருப்பது போல் ஒரு உணர்வு! ஒரு தீய சக்தி என்னை நெருங்கிப் பயமுறுத்துவது போன்ற உணர்வு! புதைக்கப்பட்ட சில புராதன உடல்கள் எழுந்து நடமாடுவது போன்ற உணர்வு! சுற்றிலும் பல வடிவங்கள்! பல வண்ணங்களில்! என்னுடைய இதயத்துடிப்பு எகிற ஆரம்பித்தது! பயம்! படபடப்பு! பதட்டம்! நடுக்கம் என்னுள் வியாபித்தது! மறுபடி என் தியான பலத்தால் அவற்றைச் சமாளித்துத் தெளிவு பெறக் கடுமையாக முயற்சித்தேன்!
***தீய சக்திகள் மறைதல்***
மறுபடி கண்கள் மூடி என்னைத் தொந்தரவு செய்து கொண்டிருந்த நினைவுகளில் இருந்து மீள முழு முயற்சி செய்தேன்! என்னுடைய டார்ச் அடித்து வெளிச்சம் காட்டவும், அல்லது வாசலில் இருந்த பாதுகாவலரிடம் சொல்லவும் தீர்மானித்தேன்! தைரியம் பெற அதுவே வழி என்று நான் நினைத்த அதே சமயம் எனது உள்மன உணர்வொன்று என்னைப் பலமாகத் தடுத்தது! ஆனாலும் மீண்டும் அந்த தீய சக்திகள் என்னைச் சூழ்ந்தன! தியானத்தைத் தொடரவும், வேண்டாம் வெளியே செல் என்றும் உணர்வுகள் மாறி மாறி என்னை அலைக்கழித்தன! இனி எப்பொழுதும் இம்மாதிரியான இக்கட்டான ஆய்வுச் சூழலில் சிக்கக் கூடாது என நான் தீர்மானித்த அதே நொடி திடீரென அத்தனை தீய சக்திகளும் என்னை விட்டு அகன்றன! விட்டு விடுதலையாகி நின்ற சிட்டுக்குருவியாய் பேரமைதியும், புனிதமான சாந்தமும் உணர்ந்தேன்! ஒரு கடினமான போரின் பின்னே ஒரு திடமான மனதின் பெருமிதத்தையும், நிம்மதியையும் அந்த அரசர் அறையில் அந்த நொடி உணர்ந்தேன்!

*புனித ஆன்மாக்களுடன் பேசுதல்*
இரண்டாவதாக வந்த மனிதர் முதலில் வந்தவரைவிட சற்றே பெரியவராக இருந்தார். அவர் என்னிடம் கூறியதாவது( எழுந்த என்னைப் பார்த்து) "உட்கார்! அந்தக் கல்லின் மீது அமர்ந்து கொள்! சில வெளிக் கண்களால் பார்க்க முடியாத சில ஆசான்கள் உன்னைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்! அதைப்பற்றிக் கூறுகிறேன்! உட்கார்" என்றார். மறுபேச்சின்றி கல்லின்மீது அமர்ந்தேன்.
*பௌதீக உடல் தாண்டி வெளிவருதல்*
அமர்ந்தவுடன் எனக்கு என்ன நிகழ்ந்தது என்று என்னால் சொல்ல முடியவில்லை. என்னுடைய உடல் பலவீனம் அடைந்தது. உடலே 'குறைந்தது' போல் உணர்ந்தேன். அதே சமயம் உடலின் கனம் கூடியதையும் உணர்ந்தேன். ஏதோ குளிர் என் கால் நுனியிலிருந்து உடல் முழுவதும் ஊடுருவிச் சென்றது. ஏதோ பனிக்கட்டிப் பாறைமேல் உட்கார்ந்து இருப்பதுபோல் அத்தனை சில்லிப்பு இடுப்புக்குக் கீழே கால்வரை மரத்தாற் போலவும் உணர்ந்தேன். என் வாழ்வு முடிந்தது எனக் கருதினேன். ஆனாலும் எனக்குள் பயமோ, வலியோ இல்லாதிருந்தேன். காலில் இருந்து சில்லிப்பு உடல் முழுவதும் பரவியது. நான் நடுங்கத் தொடங்கினேன். என் உடல் குறுகினாற் போலத் தோன்றியது. அந்தச் சில்லிப்பு என் இதயப் பகுதியை அடைந்தவுடன், என் உடல் என் வசத்தில் இல்லாததை உணர்ந்தேன். இதயத்தில் மிக லேசான வலியை உணர்ந்தேன். என்னுடைய கதை முடிந்தது, பிரமிடிற்குள் உயிரிழக்கப் போகிறேன் என்றுதான் நினைத்தேன்.
*சூட்சும சரீர யாத்திரை*
என்னுடைய உடல்மீது என் 'பிடி' தளர்ந்து நான் எங்கெங்கோ பயணிப்பதாக உணர்ந்தேன். ஒரு குறுகிய குகை வழியே ஏதோ காற்று ஒன்று என்னைக் கடத்திப் போவதுபோல் உணர்ந்தேன். சிறிது நேரம் கழித்துப் பரந்த பெரிய (உலகில்) பிரபஞ்சத்தில் நான் சுதந்திரமாய் பறப்பதுபோல் இருந்தது. இம்மாதிரியான சர்வ சுதந்திரத்தை நான் இதுவரை அனுபவித்ததே இல்லை எனலாம்! எனது சூட்சும உடல் ஸ்தூல உடலினின்றும் பிரிந்து வந்திருந்தது. நான்காம் நிலை உணர்வு ( Fourth State) எனக்குள் ஏற்பட்டது. எல்லாம் தெளிவாய்த் தெரிந்தது! புரிந்தது! நான் சூட்சும உருவில் இருப்பதையும், எனது சூட்சும சரீரப் பயணத்தில் இருப்பதையும் உணர்ந்தேன். கால்களை அசைப்பதுபோல் இருந்தாலும் உண்மையில் நான் மிதந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்!

என் ஸ்தூல சரீரம் இன்னமும் அந்தக் கல் ஆசனத்தில் இருப்பதையும், கண்கள் பாதி திறந்த நிலையில் இருப்பதையும் நானே காண முடிந்தது. கைகளை நெஞ்சில் வைத்துக் கூப்பிக் கால்களை விரித்து ஏதோ ஒரு இறந்த பிணம் அமர்ந்திருப்பதைப் போல நானே அமர்ந்திருப்பதை நானே பார்க்க முடிந்தது. கல் மேல் அமர்ந்திருந்த என் ஸ்தூல சரீரத்தையும், மிதந்து கொண்டிருந்த என் சூட்சும சரீரத்தையும் ஏதோ ஒரு சிறிய வெள்ளி இழை இணைத்திருப்பதாய்ப் பட்டது! அதைத்தான் 'சில்வர் கார்ட்' ( Silver Cord ) என்று அழைக்கிறார்கள்! ஆச்சரிய அனுபவமாய் இருந்தது. உடலினின்றும் ஆன்மா விடுபடும் நிலையை ஏன் கூண்டிலிருந்து விடுதலையாகும் பறவைக்கு ஒப்பிடுகிறார்கள் என்பதை அன்று முழுமையாய் உணர்ந்தேன். ஒரு பறவைபோல என் ஆன்மா மகிழ்வுடன் பறந்து, மிதந்து கொண்டிருந்தது. என் உடலும் ஆன்மாவும் தனித்தனியாய்க் கண்டேன்! அது ஒரு ஆச்சரிய அனுபவம்!

***ஆன்ம விடுதலை உணர்தல்***

இதுவே சிறப்பு! உடல் எனும் கூட்டிலிருந்து ஆன்மா எனும் அழகிய பறவை சுதந்திரம் பெறும் இனிய பொழுதுதான் 'மரணம்' என்று உணர்ந்தேன்! ஆக என்றென்றைக்கும் எனக்கு மரணம் இல்லை! என் உடல்தான் அழியுமே தவிர, என் உயிர், எனது ஆன்மா சாகாவரம் பெற்றது என்ற தெளிவைப் பெற்றேன்! முன்பு இதைப்பற்றிப் படித்திருந்தாலும் இப்பொழுது நானே அனுபவித்துத் தெரிந்து கொண்டேன். என்னுடைய நெடுநாள் 'மாயை' ஒழிந்தது! நான் என்பது என் ஆன்மா! இந்த உடல் இல்லை என்று தெளிந்தேன்! உடலின்றிக்கூட என்னால் 'வாழ' முடியும் என்பதை அறிந்தேன்! பூமியில் பிறந்து வாழ்வதற்கான ஆன்மாவிற்குத் தைக்கப்பட்ட சட்டை போன்றதுதான் உடல். சட்டையை கழற்றுவது போன்றதுதான் மரணம் தவிர, "ஆன்மாவிற்கு மரணமே இல்லை" என்று உணர்ந்தேன்! ஆன்மா அழியாதது என்று உணர்ந்து தெளிந்தேன்.

*__முக்கியமான பாடம்__*

அப்படியே நான் மிதந்து கொண்டிருக்கையில் இரண்டாவது மனிதர், இருவரில் பெரியவர் என்னருகே வந்தார். "இன்றைக்கு நீ மிக முக்கியமான பாடத்தை கற்றுக் கொண்டிருக்கிறாய்! ஆன்மாவிற்கு மரணம் இல்லை என்ற பாடம்! இப்போது நீ (பார்த்த) படித்த பாடம்" என்றார்.

***முன்பே இறந்தவர்களுடன் சந்திப்பு***

திடீரென நான் அங்கு 20 வருடங்களுக்கு முன்பு இறந்துபோன எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணியைப் பார்த்தேன். 12 வருடங்களுக்குமுன்பு இறந்த என் சிறு வயது தோழன் ஒருவனையும் கண்டேன். ஒரு விபத்தில் கொல்லப்பட்ட ஒரு சிறு பெண்ணைப் பார்த்தேன். ஆனால் அங்கு அவள் மகிழ்வுடன் சிரித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் எல்லோருமே என்னுடன் மகிழ்வாக சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு பிறகு மறைந்து போனார்கள்! இப்பொழுது அந்த இரண்டாம் ஆசான் மறுபடி என்னிடம் பேச ஆரம்பித்தார். "பார்த்தாயா? என் அருமை மகனே! நீ இறந்தவர்கள் எனக் கருதும் எல்லோரும் உயிருடன் இங்கே வாழ்கிறார்கள்! நமது முன்னோர்கள் வேறுபட்ட பல உயிர்களில் இருந்து மனித வளர்ச்சியின் ரகசியங்கள் வரை ஆராய்ந்து வைத்திருக்கிறார்கள். படைத்தவன் என்கிற பெயருடைய கடவுள் சில நல்ல மனிதர்களின் ஆன்மாக்களை இயற்கையின் பாதுகாவலர்களாகத் தெரிந்தெடுத்து இருக்கிறான். இதெல்லாம் நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். நல்லது நீங்கள் மறுபடியும் உங்கள் உடலுக்குள் நுழைந்து கொள்ளலாம். இங்கு நீங்கள் கண்டதை எல்லாம் எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுங்கள்! இந்த உண்மை எல்லோருக்குமானது. மனித வளர்ச்சியையும் இயற்கையின் வளர்ச்சியையும் தடுப்பவர் எல்லோருக்கும் ஒரு பாடமாக விளங்கட்டும்" என்றார்.

***அந்தப் புனித ஆன்மாக்கள் மனித குலத்திற்கு விடுத்த செய்தி***

அட்லாண்டிஸ் இளவரசன் கட்டிவைத்த இந்த மாபெரும் பிரமிட் இது! ஆனால் தொடர்ந்து வந்த மனிதர்களின் முறையற்ற வாழ்க்கை முறையால் நிறைய நாசம் ஏற்பட்டது. ஆன்மிக விழிப்புணர்ச்சி இல்லாமை, மனித நலத்தை மீறிய மிருக நடத்தை, சுயநலம் இவற்றால்தான் நாசம் ஏற்பட்டதே தவிர அது கடவுளின் விருப்பம் அன்று! எது எப்படியோ, கடவுள் ஒவ்வொரு வாழ்விற்கும் ஏற்ப சில நியதிகளை உண்டாக்கி இருக்கிறார். அவற்றை மீறாமல் வாழ்தல் வேண்டும்! சரி! நீங்கள் போய் இந்த தெய்வச் செய்திகளை எல்லோருக்கும் தெரிவியுங்கள்" என்றார்.

இவர் இப்படிக் கூறியவுடன் அந்த நியதிகள் என்னென்ன என்று அறியும் ஆவல் எனக்குள் ஏற்பட்டது. என் மனதைப் படித்தவர்போல் அவர் கூறினார், "மகனே! எல்லாவற்றிற்கும் சரியான நேரம் வரும்! அதுவரை பொறுத்திரு" என்றார். எனக்குச் சற்று ஏமாற்றமாய்த்தான் இருந்தது. அதையும் அறிந்ததுபோல் அவர் கூறினார், "குருமார்கள் எல்லாவற்றையும் எல்லோருக்கும் (To common people) சொல்லிவிட மாட்டார்கள்! ஆனால், நீ என்னை மிகவும் மகிழ்வடையச்செய்துவிட்டாய்! உனக்கு எங்களுடைய ஆசீர்வாதங்கள்! என்னுடன் வா! உனக்கு மகிழ்ச்சி கிட்டும்" என்றார். அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது! நான் என் நினைவை இழந்தேன்! (Coma Stage) யாரோ என்னை ஒரு நீண்ட ஒளிமிகு பாதையில் அழைத்துச் சென்றார். சன்னல்களோ வேறு விளக்குகளோ அங்கில்லை! ஆனாலும் வெளிச்சம் இருந்தது! அந்த ஒளி என்னுடன் வந்த 'ஆன்மிக மகான்களின் ஆரா' என்று தெரிந்து கொண்டேன். மேலும் எனது வெள்ளி இழையும் ஒளி தந்தது. ஆனாலும் என்னால் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை! அவர்கள் லேசான ரோஜா வண்ணத்தில் இருந்தனர். ஆனாலும் அந்த ஒளி வெள்ளத்திற்கு என்னால் காரணம் சொல்ல இயலவில்லை!

***இரகசிய இடங்கள்***

அந்த மகா புருஷர் என்னை அழைத்துச் சென்றார். "பிரண்டன்! பக்கவாட்டிலோ அல்லது பின்னாலோ திரும்பிப் பார்க்காமல் என்னுடன் வா" என்றார். சிறிது தூரம் நடந்தபின் "பிரார்த்தனைக் கூடம்" போன்ற ஒரு அறையில் நுழைந்தோம்! எனக்கு இந்த இடம் பிரமிடுக்குள் புதைந்து உள்ளதோ அல்லது பிரமிடு உள்ளேயே இருந்ததா என்று கணிக்க இயலவில்லை! ஏனென்றால் அதை நான் இதற்குமுன் பார்த்ததே கிடையாது! அது ஒரு ரகசிய இடம்! அதன் வாயில்களைத் தேடிப்பார்த்தேன்! பிரமிப்புடன் எந்தப் பகுதியில் இவை உள்ளன என்று நினைத்துப் பார்த்தேன்! ஆவல் தாங்காமல் திரும்பிப் பார்த்து விட்டேன்! என்னால் எதையும் காண முடியவில்லை! சிமெண்டாலும், கற்களாலும் கட்டப்பட்டது என்று தெரிந்து கொண்டேன்! அதன் சுவர்களை உற்றுப் பார்த்தபோது திடீரென ஒரு வேகமான காற்று வந்து என்னை தள்ளியது! நான் வானத்தில் மிதந்தேன்! யாரோ "இப்போது இல்லை இப்போதே இல்லை" என்று கூறுவதைக் கேட்டேன்! மறுபடி என் உடல் அந்தக் கல் ஆசனத்தில் அமர்ந்திருந்ததை உணர்ந்தேன்.

***இரகசிய இடங்களின் நுழைவாயில்***

மறுபடி அந்த மாமனிதர் என்னிடம் பேசினார்! "மகனே! அந்த இரகசிய இடங்களின் நுழைவாயிலைத் தேடுகிறாயா? அது உன் மனம் இன்றி வேறில்லை! உன் உள்ளேயே எல்லாம் உள்ளது! உனக்குள் உள்நோக்கி பார்! பிறகு எல்லாவற்றையும் புரிந்து கொள்வாய்! இந்தப் புராதன பிரமிடின் உள்ளே உள்ள அத்தனை இரகசிய இடங்களும் உன் உள்ளே உள்ளன! இதன் உண்மையான பொருள் என்ன தெரியுமா? மனிதன் தன் உள் யாத்திரையை நடத்தி எல்லா பிரபஞ்ச இரகசியங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்! அவன் தன்னைத்தான் அறிய வேண்டும்! அதுதான் 'முழு உணர்தல்!' முழுப் புரிதல்! ஆன்மாவை அறிதல்! நீ உன்னை உணர்ந்து கொள்! அது போதும்" என்றார். (திருமூலர் சொன்னதும், ரமண மகரிஷி கூறியதும், பகவத் கீதை சொன்னதும் இதுவே) இதைக் கூறிவிட்டு அவர் அந்தப் புனித தெய்வீக மனிதர் மறைந்துவிட்டார்" என்று கூறி முடிக்கிறார் பால் பிரண்டன், தனது " இரகசிய எகிப்தில் ஒரு தேடல்" ( A Search in Secret Egypt) என்ற புத்தகத்தில்!

தன்னை அறிதலே சிவமறிதல் என்ற பெரியோர் வாக்கின்படி "நான் யார்" என்று ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டு உள் மனதுள் யாத்திரை செய்யத் துவங்குங்கள். உங்கள் உள்வெளிப் பயணம் உள்ளொளிப் பயணமாக இருக்கட்டும்.

டாக்டர். பிலிப் கல்லாஹன் ( Philip Challahan ) ஒரு ஆய்வு மேற்கொண்டார். அதில் பிரமிட் கட்டுமானப் பொருட்களில் ஒன்றான ரோஸ் கிரானைட் கற்கள்தான் அரசர் அறை எனப்படும் அதிக சக்தி வாய்ந்த இடத்தை கட்ட (பிரமிடுக்குள்) உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். ரோஜா வண்ண அந்தக் கற்கள்தான் அதிக சக்தி உள்ள பாரா மேக்னட்டிக் எனும் அதிக காந்த சக்தி கொண்ட கற்கள். அதேபோல் பிரமிடிற்குள் மேல் பூச்சுக்கான சுண்ணாம்புக்கல் (Limestone), டையமாக்னடிக் சக்தி( Diamagnetic) கொண்டது என்று அறியப்பட்டது. கூர்முனை அதிக அளவு சக்தி ஓட்டத்திற்குப் பயன்படுகிறது. இவையெல்லாம் கில்லியன் போட்டோகிராஃபி எனும் சக்திமிகு புகைப்படக் கருவியால் கண்டுபிடிக்க சாத்தியமானது.
பூமியின் சக்திகள் அளவீட்டில் 'சமநிலை' நிலைக்க வைக்க பிரமிட் சக்தி ( குறைபடும் சக்தியை பிரமிட் ஈட்டித்தருகிறது) உதவுவதால் பூமியின் நிலைத்த செயல்பாட்டிற்கு பிரமிட் உதவுகிறது என்றும் கண்டறிந்தார்.
"இரகசிய எகிப்தில் ஒரு தேடல்" என்ற பால் பிரண்டனின் புத்தகத்திலிருந்து சில பகுதிகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

# 13. எகிப்தின் பிரம்மாண்ட பிரமிட்

***(The Great Pyramid of Egypt)***
ஆதாரம் : "பிரமிட் சக்தி" - மேக்ஸ் தாத் மற்றும் க்ரேக் நெல்சன் ( Source: Pyramid Power - by Maxtoth and Greg Nelson)
உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக எகிப்தின் பிரம்மாண்ட பிரம்மிட் கருதப்படுகிறது. 13 ஏக்கர் அடித்தள அமைப்பில் ஒரு இஞ்சில் ஒரு பகுதியாக நிறுவப்பட்டு உள்ளது. அதன் தற்போதைய உயரம் 45 அடிகளுக்கும் மேலானது. உலகின் மிகச்சிறந்த மன இயல் வல்லுநர்களில் ஒருவரான டாக்டர். எட்கர் கெய்ஸி ( Dr. Edgar Cayce) கூற்றின்படி எகிப்தில் கிசா ( Giza) வில் உள்ள புராதன பிரமிட் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டதாகும். அதாவது இன்றைய மனித நாகரீகத்திற்கு வெகுகாலம் முன்பு!

***கணக்கியலும் பிரமிடும்(Geomatry and the Great Pyramid)***
இரண்டு விதமான கணக்கியல் உள்ளது. ஒன்று நிலைத்த(Static) மற்றும் மாறும்(Dynamic) இயல்புடையவை. ஒரு பொருளின் அல்லது இடத்தின் மாறும் தன்மைகளைக் கணக்கிடும் எண்களான Pi (3.14)ம் Phi (1.618)ம் நிலைத்த கணக்கியலுக்குத் தேவையில்லை. ஆனால் மாறும் கணக்கியலுக்கு அவை இரண்டும் (பல்வேறு பகுதிகளையும் கனத்தையும் அளவிட) தேவை.
பிரபஞ்ச வெளியில் தோன்றும் ஒவ்வொரு வித மாறும் வடிவமும் இந்த பௌதீக உலகிலும் தோன்றுகிறது. அதற்கான குறிப்பிட்ட வடிவத்துடன் இந்த பிரம்மாண்ட பிரமிடின் பக்கவாட்டு நீளம் எடுத்துக்கொண்டு அதை யூனிட்டுகளில் கணக்கிட்டால் உதாரணமாக இரண்டு யூனிட் என்று வைத்துக் கொண்டால் அதனுடைய உயரமும் மாறும் (To be square root of phi units long instead of one unit long) அதாவது பிரமிடின் உயர கணக்கிடல் "மாறும் கணக்கியலுக்கு" உட்பட்டது. ஆனால் வடிவம் 'நிலைத்த' கணக்கியல் சார்ந்தது.
பண்டைய பிரமிட் வேறு உலக இருப்பாளர்களால் கட்டப்பட்டது என்று நம்பப்படுகிறது. இது மேக்ஸ் தத் மற்றும் நெல்சன் எழுதிய "பிரமிட் சக்தி" எனும் புத்தகத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக முக்கிய கட்டிடத்திற்குத் தேவையான க்வாரீட் ( quarried) கற்கள் 2 டன் என்றால் அதன் துணைக் கட்டிடங்களுக்கான கற்கள் 200 டன்கள் தேவைப்படும். 200 டன்கள் மோனோலித்( ஒரு பெரிய நீண்ட வடிவுடைய கல்) கற்களைத் தூக்கி வந்து, அதுவும் நைல் நதி வழியாக சரக்குப் படகுகளில் ஏற்றி வந்து பின் இறக்கி அவற்றை அடுக்கிக் கட்டினர் எனும்போது அவர்களின் ஆற்றலும், திறமையும், பொறுமையும் நம்மைப் பிரமிக்க வைக்கும் அளவிற்கு ஆச்சரியமாய் உள்ளதல்லவா?

பிரமிடுகளை 'கடவுளரின் கோயில்' அல்லது 'சக்தி பெருக்கும் இயந்திரம்' என்று வர்ணிக்கிறார்கள். அவை தவிர மனித மற்றும் சரித்திரச் சான்று கருவூலம், கற்றல் மையம் என்றெல்லாம் கூறுகிறார்கள். அறிஞர்களின் கருத்துப்படி உடல் தாண்டிய (சூட்சும சரீர) அனுபவங்களை பெறவும், மனித மனம் ஓர் உயர் நிலைக்குச் செல்வதற்கான வழியாகவும், அபரிமிதமான சக்தி பெருக்கம் தரும் ஒரு கருவியாகவும் இப்படி பல வகைகளில் பயன்கள் தரக்கூடிய வகையில்தான் கிசா பிரமிட் (Giza) கட்டப்பட்டது என்று கருதப்படுகின்றது.
அதுவும் தியான நிலையில் 'மனோசக்தி' தூண்டப்படவும், உயர்நிலைக்குச் செல்வதற்கும் பிரமிட் தியானம் வழிவகுக்கிறது என்பது நிதர்சன உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளது. மனவியல் வல்லுனர்களும், பிரமிட் விஞ்ஞானிகளும் மற்ற இடங்களில் செய்யும் தியானத்தைவிட பிரமிட் தியானம் வெகு விரைவில் மனிதனை மேம்பட்ட உணர்வு நிலைக்கு எடுத்துச் செல்வதாக பல ஆய்வுகள் செய்த பின்னர் வெளியிட்டுள்ளனர்.

**(அ) எங்கெல்லாம் பிரமிட் கட்டப்பட்டு அங்கு தியானம் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் பிரபஞ்ச சக்தி அதிக அ**
**ளவில் தியானிகளால் ஈர்த்துக் கொள்ளப்படுகிறது.**
**(ஆ) தினசரி பதட்டத்தையும், படபடப்பையும் குறைக்க பிரமிட் தியானம் மிகவும் உதவுகிறது.**
**(இ) தொடர்ந்து பிரமிட் தியானம் செய்தால் நமது 'மூன்றாவது கண்ணை' திறந்து வைக்கிறது.**
**(ஈ) வெளியில் செய்யும் தியானத்தில் கிடைப்பதைவிட மூன்று மடங்கு அதிக பலன்கள் பிரமிட் தியானத்தில் கிடைக்கிறது (ஒரே அளவு தியானம், ஆனால் மூன்று மடங்கு அதிக பலன்)**
**(உ) பிரமிடில் தியானம் செய்பவர்களில் பலருக்கு உயர்மன உணர்வு நிலை, இசை, மேம்பட்ட மனோசக்தி, ஞாபக சக்தி, முந்தைய ஜென்மங்களின் நினைவு திரும்புதல், பல்வேறு பரவசக் காட்சிகள், குறியீடுகள் எல்லாம் கிட்டியுள்ளன.**
**(ஊ) பிரமிட் தியானத்தால் அமானுஷ்ய சக்திகள், கோள்களுக்குள் பயணம், தொலைநோக்கு சக்தி, பல விடை தெரியாத வினாக்களுக்கு விடை தெரிதல், வாழ்வு முழுவதற்குமான சக்தி ஆற்றல் பெறுதல் - இப்படிப் பல பயன்கள் கிடைத்துள்ளன.**

பிரமிடின் விசேஷக் கட்டமைப்பு அதன் நிலைத்த தன்மைக்கு பெரிதும் உதவுகிறது. சூறாவளிகள், நில அதிர்வுகளின்போதும், மற்ற இயற்கைச் சீற்றங்களின்போதும் அவற்றைத் தாங்கி அசையாது நிற்கும் திறன் பிரமிடுக்கு உண்டு. இதற்கு முக்கிய காரணம் பக்கங்களைவிட அதிக பரப்பளவு கொண்ட அதன் அடித்தளம்தான். பிரமிடின் புவியீர்ப்பு விசை பூமிக்கு மிக அருகில் இருப்பதால் உகந்த இயற்கைச் சூழலை பிரமிட் இயல்பாகப் பெறுகிறது.

***பிரமிட் ஆராய்ச்சிகளும், விஞ்ஞானரீதிப் பிரிவுகளும்***
***( Pyramid Research and Scientific Recordings )***

சமீப காலமாக 'பிரமிட் இயல்' மிகவும் புகழ்பெற்று விட்டது. பிரமிட் சக்திக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதாவது சாதாரண மிருகங்களுக்கு மருத்துவம் என்ற அடிமட்டத்திலிருந்து வேறு உலக (Extra terrestrial) செய்திகள் வரை என்ற அளவில் புகழ்பெற்று விட்டது. பிரமிட் தியானம் விஞ்ஞான ரீதியாகவும் பலன் கொடுக்கக் கூடியது என்பதை பிரமிட் தியான ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தி உள்ளன.

இருவேறு மனநிலை பாகுபாடு என்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் விளக்கத்திற்கு அப்பாற்பட்ட, "புலன் தாண்டிய உணர்வு நிலை" நிரூபணங்களைத் தந்துள்ளது. உதாரணமாக, உடல் சார்ந்த வெறும் மூச்சு மூலமாகவே உடல் தாண்டிய, "இருவேறு மனநிலை" உணர்விற்குச் செய்திகள் பெறுவதும், தருவதுமான நிகழ்வுகள் நடைபெறும் சாத்தியக் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; நிரூபிக்கப்பட்டுள்ளன. சிறிய கோள்களைவிடப் பெரியவைகளான பூமி, சூரியன், கோள்மையம் ஆகியவை அளவால் மாறுபட்டு உள்ளன. ஆயினும் பிரபஞ்ச சக்தி எளிதில் வசப்பட ஒரு பிரமிட் கட்டமைப்பு அல்லது அதையொத்த கூம்பு வடிவ கட்டமைப்பு தேவை என்பதும் உணரப்பட்டிருக்கிறது. பிரமிடுக்குள் வைக்கப்படும் எப்பொருளும் அல்லது எந்த நபரும் இந்த "இருவேறு மனநிலைக்" களத்திலிருந்து பல செய்திகள் பெறவும், தரவும் ஏதுவான ஒரு சூழல் பிரமிடில் கிடைக்கிறது.

***மருத்துவத்துறையில் பிரமிடின் குணமாக்கும் திறன்***
***( Therapeutic effect of Pyramids in Medical Field )***

ரஷ்யாவின் மருத்துவ அகாடமியில் உள்ள 'நுண்கிருமியியல்' கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். எம். கில்மென்கோ(Kilmenko) மற்றும் டி. என். நோஸிக்(Nosik) இருவரும் இணைந்து மனித உடம்பில் இயற்கையாகக் காணப்படும் ஒரு கிருமி எதிர்ப்பு சக்தி(Drug venoglobulin) பற்றி ஒரு ஆய்வு மேற்கொண்டனர். அந்த ஆய்வின்படி, " மனித உடம்பில் கிடைக்கும் அந்த 'எதிர்ப்பு சக்தி மருந்தில்' சிறிது எடுத்து நீர்க்கச் செய்து மில்லிமீட்டருக்கு 50 மைக்ரோகிராம் என்ற அளவில் தயார் செய்து அதை ஒரு பிரமிட் உள்ளே குறிப்பிட்ட நேரம் வைத்தால் அதன் சக்தி மும்மடங்கு அதிகரித்து அதிக வீரியமுள்ள மருந்தாக அது மாறும்" என்று கண்டுபிடித்தனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த R+ D குழந்தை நலம், உடற் பருமன் மற்றும் கர்ப்பப்பை பகுதி மருத்துவப் பிரிவு பேராசிரியர் திரு. ஏ.சி. ஆண்டனாப் எட் ( Antonou Et ) என்பவர் பிரமிட் உள்ளே வடிகட்டிய ஜூஸ் 40% சர்க்கரைச் சத்தைக் கலந்து வைத்து எடுத்து அதைப் பேறுகாலத்திற்கு முன்பே பிறந்துவிட்ட (Pre matured) 20 சிறு குழந்தைகளுக்குக் கொடுத்துப் பார்த்தால், ஆச்சரியப்படும் வகையில் பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட அந்த சர்க்கரைச் சத்து நீர் குடித்த குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி மிக அதிகமாகி அவர்களின் ஆரோக்கிய நிலையும் மிகவும் மேம்பட்டது. அதைப்போலவே சாதாரண தண்ணீரையும் பிரமிட் உள்ளே வைத்து உபயோகித்தால் நல்ல ஆரோக்கியம் கிட்டும் எனக் கண்டறிந்தனர்.

அதுபோல பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட பொதுவான திரவங்கள் (குளுக்கோஸ், ஐசோ - ஓஸோமாடிக்), மதுவருந்தும் நோயாளிகள் ஆனவர்களை அந்த போதைப் பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மருந்தாக செயல்பட்ட விந்தையையும் கண்டறிந்தனர். உள்ளுக்கும், வெளியேயும் மருந்தாகப் பயன்படுத்தலாம் அந்த பிரமிட் நீரை!

மிக முக்கியமாக, இந்த மேற்கண்ட ஆய்வுகள் வெளியில் இருக்கும் பிரபஞ்ச சக்தி ஆதாரங்களால் 'DNA மாலிக்யூல்' நேரடியாகப் பாதிப்படைகிறது என்ற உண்மையை ஊர்ஜிதம் செய்தது. எனவே ஒரு தென்படாத சக்தி ஆதாரத்தில் DNA அணுக்கூறுகள் இருந்து அவற்றுள் பிரபஞ்ச சக்தி ஓட்டம் அதிகரிக்கப்பட்டால் அவைகளின் செயல் திறன் கூடி முழு ஆரோக்கியமும் பலமும் பெறும் அந்த DNA வைத் தாங்கிய உயிர் என நிரூபிக்கப்பட்டது!
ஒரு கனடா நாட்டு மருத்துவர், பில் கெரில் ( Bill Kerell ) என்ற பிரமிட் ஆராய்ச்சியாளரிடம் கூறினார்: " என்னுடைய மருத்துவமனையில் தீக்காயம் பட்டுத் துடித்துக் கொண்டிருந்த நோயாளிகளுக்கு பிரமிடை உபயோகித்துப் பார்த்ததில் அவர்களுக்கு வலி பெருமளவு குறைந்தது, காயங்களும் சீக்கிரமே ஆறின" என்றார்.

*இயற்கை எண்ணெய்*
வரிசையான எண்ணெய்க் கிணறுகள் மேலே சில பிரமிடுகள் கட்டப்பட்டன. சிறிது காலம் கழித்துப் பார்த்தால் பிரமிடுகள் அடியில் உள்ள எண்ணெய்க் கிணறுகளில் இருந்து பெறப்பட்ட எண்ணெயின் அடர்த்தி 30% குறைந்து காணப்பட்டது. அதே சமயம் 30% அதிக எண்ணெய் (உற்பத்தித்திறன்) உற்பத்தி அதிகரித்தது. எண்ணெயில் இருக்கும் வேண்டாத அம்சங்கள் (பிசுக்கு, கோந்துத்தன்மை, பைரோபிட்யூமன் (Pyrobitumen), பாரபின் (Paraffin) ஆகியவை) குறைந்து எண்ணெயின் அடர்த்தி குறைந்தது. கப்கின் மாஸ்கோ அகாடமி (Gubkin Moscow Academy of Oils and Gas) ம் மேற்கூறப்பட்ட மாறுதலைச் சரியென அங்கீகரித்தது.

***பிரமிடுகளும் செடிகளும்***
செடி விதைகள் விதைப்பதற்கு முன்பாக சுமார் ஐந்து நாட்கள் பிரமிட் உள்ளே வைக்கப்பட்டுள்ளன. 20க்கும் மேற்பட்ட விதை வகைகள் வைக்கப்பட்டு (across tens of thousands hectares) நிலத்தில் விதைக்கப்பட்டன. விளைவித்தப் பிறகு பார்த்தால் பிரமிட் விதைச் செடிகள் 20% முதல் 100% வரை விளைச்சலில் அதிக பலன் காட்டியது. அந்தச் செடிகளை நோய் தாக்க வில்லை, பஞ்சத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை.
பிரமிட் உள்ளே வைத்த செடிகள் மிக வேகமாக (வெளியே விட இரண்டு மடங்கு அதிகமாக) வளர்ந்தன. பிரமிட் விதைகள் பழுதடையாமல் ஆரோக்கியமாய் வளர்ச்சி பெற்றுத் தந்தன.

***உணவு (Food)***

வெளியே வைக்கும் உணவுப் பொருட்களைவிட பிரமிடுக்குள் வைக்கப்படும் உணவுப் பொருட்கள் அதிக காலம் புத்தம் புதுப் பொலிவோடு விளங்குகின்றன. செயற்கை வாசனை, சுவையூட்டப்பட்ட உணவுகள் தங்கள் சுவையை இழக்கின்றன. ஆனால் இயற்கை மணம், சுவைப் பொருட்கள் அதிக சுவை பெறுகின்றன. அதன் அமிலத்தன்மை குறைகிறது. சுவை அதிகரிக்கிறது. உணவின் கசப்புச் சுவை குறைகிறது. பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட உணவை வளர்சிதை மாற்ற ஆய்வில் மேற்கொண்ட போது பிரமிட் உணவு தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தது. அதன் மாலிக்யூல் வளர்ச்சியே மாறுபட்டது. உணவுப் பொருளின் நீர்ச்சத்தைக் குறைக்கும் பிரமிட் அதைப் புதிதாகவும் வைத்திருக்கும், அழுகவிடாது. பொருட்களை அழுக வைக்கும் நுண்ணுயிர் வளர்ச்சி பிரமிட் உணவு வகைகளில் குறைகிறது. எனவே உணவு அப்படியே புதிதாய், சுவையாய் விளங்குகிறது.

பிரமிட் சக்தியூட்டப்பட்ட உணவுகளைச் சாப்பிட்ட மக்கள் மிகுந்த 'நேசமிகு மனிதர்களாய்' மாறுகிறார்கள். உணவுதான் குணங்களுக்கு அடிப்படை என்ற மெய்ஞானம் இங்கு உண்மை என விஞ்ஞானப்பூர்வமாக பிரமிடால் நிரூபிக்கப்பட்டுள்ளது. உப்பையும், மிளகையும் பிரமிட் உள்ளே வைத்துப் பாதுகாத்த சில ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள், பின்னர் அதே உப்பையும், மிளகையும் வைத்துச் சமைக்கப்பட்ட உணவுகளைத் தயாரித்து அதை ரஷ்யாவின் பல்வேறு இடங்களில் இருந்த ஜெயில் கைதிகளுக்குக் கொடுத்து வந்தனர். சில மாதங்கள் தொடர்ந்து செய்தபிறகு பார்த்தால், ஆச்சரியம்! ஆனால் உண்மை! அந்தக் கைதிகள் அடியோடு மாறினர்! நன்னடத்தை பெற்றனர்! அமைதியாக மாறினர்! அவர்களின் முரட்டு இயல்பும், குற்றம் இழைக்கும் பாங்கும் மறைந்து போயின! அதேசமயம் அந்த உணவு சாப்பிடாத வேறு இடங்களில் உள்ள ஜெயில் கைதிகள் பழையபடியே தீயவராகவே இருந்தனர். ஆய்வில் பிரமிட் மிளகு, உப்பு உணவு வித்தியாசத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் செய்யாமல் இந்த ஆய்வைச் செய்து முடித்தபோது மேற்சொன்னது நடந்தது. அது நிரூபிக்கப்பட்ட மெய்ஞானம் எனலாம்!

*தண்ணீர்*
பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட நீரில் 'எதிர்மறை மின்னணு' (ions) அதிகரிக்கிறது. இவ்வகை நீர் மனிதர்களுக்கு மிகப் பயனுடையதாகிறது. ஒரு இரவு முழுவதும் இப்படிப் பிரமிட் அடியில் வைக்கப்பட்ட நீரை மறுநாள் அருந்தி சக்தியும், ஆரோக்கியமும் பெறலாம்.
மற்ற எல்லா உணவுகளைவிட பிரமிட் தண்ணீர் அதிக ஆற்றல் உடையது என்று கண்டறியப்பட்டுள்ளது. ஏற்கனவே பிரான சக்தி நீரில் அதிகம், அதோடு பிரமிட் சக்தியை வேறு நீருக்கு அதிக பிராண வாயுவைக் கொடுக்கிறது. இந்த அதிக சக்தி ஊட்டப்பட்ட நீர் 'Octahedron Crystal'ஐ உருவாக்குகிறது. பிராண சக்தி அதிகரிக்கிறது. தண்ணீரின் 'குளோரின்' அளவு குறைந்து மேலும், அதிக சுவை உள்ள, சக்தி உள்ள பிராண சக்தி அதிகரித்த குடிநீராக மாறுகிறது.
பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட நீர் அதிகப் பயனுடையதாகவும், குணமளிக்கும் ஆற்றல் மிக்கதாகவும் மாறியது. இந்த நீர் பருகிய மனிதர்களும், மிருகங்களும் அதிக சக்தியும், ஆரோக்கியமும் பெற்றனர்.
வடிகட்டிய நீர் வைக்கப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில்கள் பிரமிட் உள்ளே வைக்கப்பட்டன. 30° சென்டிகிரேடுக்கும் கீழே ( அல்லது 6°F) அவை சீதோஷ்ண மாற்றம் பெற்றன. நீரின் மற்றும் காற்று தட்பவெப்பம் ஒரே மாதிரி சீராக இருப்பதை பாட்டிலின் உள்ளே வைக்கப்பட்ட அளவுமாணிகள் ( Thermometers ) நிரூபித்தன. ஆனாலும் அந்த தட்பவெட்பத்தில் வெளியே பனிக்கட்டியாக மாறும் நீர் பிரமிட் உள்ளே அவ்வாறு மாறாமல் நீராகவே இருந்தது. ஆனாலும் பாட்டில்கள் அசைக்கப்பட்டால் அல்லது குலுக்கப்பட்டால் 'சிறிய பனிக்கட்டித் துகள்கள்' உண்டாக்கின. பிறகு பனிக்கட்டியாக மாறின. இவை எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்யும்போது கோலாட் என்ற விஞ்ஞானியும், அவரது உதவியாளர்களும் ஒலி, ஒளிப் படமாக எடுத்து நிரூபித்தனர்.
பிரமிட் நீரில் ஊறவைக்கப்பட்ட மூட்டுவாத நோயாளிகளின் மூட்டுகளில் மூட்டு வலி குறைந்தது! மறைந்தது! அவர்களின் மூட்டுவாத பிரச்சனைகள் விரைவில் தீர்ந்தன.
வெட்டுக்காயங்கள், நெருப்புக் காயங்கள், சிராய்ப்புகள், புண்கள், தோல் தடித்து மரத்துப்போகும் பிரச்சனைகள், கைவிரல் நகக் கோளாறுகள், வடுக்கள், மருக்கள், பாலுண்ணிகள் இவை எல்லாவற்றிற்கும் பிரமிட் தண்ணீர் உபயோகித்துப் பலன் பெறலாம். அவர்கள் ஏற்கனவே சாப்பிடும் மருந்துகளுடனும் பிரமிட் தண்ணீரும் சேர்ந்தால் அதிக விரைவில் அதிக குணம் பெறலாம்.
பிரமிட் நீரில் சமைக்கப்பட்ட உணவு அதிக நேரம் புதிதாகவும், சுவையாகவும் இருக்கும்.

*சீதோஷ்ண நிலை ( Weather )*

பிரமிட் சூழல் அமைந்த பகுதிகளில் தட்பவெப்ப நிலை மிகச் சீரானதாகவும், இயற்கைச் சீற்றங்களை எந்தவிதப் பாதிப்புமின்றி சமாளிக்கும் திறன் மிக்கதாகவும் விளங்குவதை ஆராய்ந்து கண்டு நிரூபித்துள்ளனர். மற்றப் பகுதிகள் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டபோது பிரமிட் சூழ்ந்த பகுதி சீராக இருந்தது.

*பிரமிடின் உள்ளே மனித அனுபவங்கள் ( Human Experiences in Pyramids )*

பிரமிட் சக்தியை அளக்கலாம். ரேடிதீஷயா அல்லது டவுசிங் ராட் ( Radies thesia or dowsing rods ) உபயோகித்து பிரமிடின் கூர்முனையிலிருந்து தொடர்ந்து ஸ்பைரல் (Forming a continuous curve around a central point of Axis ) சக்திப் பொழிவு பிரமிட் உள்ளே உள்ளவர்களுக்கும், உள்ளவைகளுக்கும் கிடைக்கிறது என்று கண்டுபிடித்துள்ளனர். அச்சக்தி விரிவடைந்து, அதன் தாக்கமும் மேலே, மேலே உயர்ந்த நிலைக்குச் செல்வதையும் ஆராய்ந்தறிந்தனர்.

பிரமிட் உள்ளே அமர்ந்த பிறகு (15 நிமிடம்) எடுக்கப்பட்ட புகைப்படத்தில் 'அம்மனிதனின்' ஒளிவட்டம் விரிவடைவதையும், ஒளிவுடையதாகவும் மாறுவதையும் 'கிர்லியன் போட்டோ' நிரூபித்தது.

பில் கெரில் என்ற ஆய்வாளரும் அவரது உதவியாளர்களும் செய்த ஒரு ஆய்வின்படி பதட்டமிகு மனிதர்கள் பிரமிட் தியானத்திற்குப் பிறகு மிகவும் சாந்த ஸ்வரூபிகளாக மாறியதையும், மந்த இயல்புடையவர்கள் சுறுசுறுப்பானதும் நிரூபிக்கப்பட்டது.

பிரமிட் உள்ளே வைக்கப்பட்ட வீடுகளில் வசித்தவர்கள் அல்லது பிரமிட் அடியில் தூங்கியவர்கள், தியானம் செய்தவர்கள் 'நேர்மறை எண்ணங்கள்' பெற்றார்கள், ஆக்கபூர்வமாய் வளர்ந்தார்கள், மாறினார்கள்! உடலில் மிதமிஞ்சிய நச்சுப்பொருள் (Toxins) உள்ளவர்கள் அந்த நச்சுப் பொருட்கள் நீங்கப் பெற்றார்கள்!

பிரமிட் தியானம் செய்த தியானிகளின் 'பீட்டா மற்றும் தீட்டா' எண்ண அலைகள் மேம்பட்டன! சாதாரண மூளையின் எண்ண அலைப்போக்கைவிட இவை அதிக அளவில் முன்னேற்றம் கொண்டிருந்தனர் (அடிக்கடி இது நிகழ்ந்தால் அவர்களின் மூன்றாம் கண் திறக்கும் வாய்ப்பும் உண்டு).

***பிரமிட் தியானிகளின் நிச்சயமான அனுபவங்கள்***
**1. உடல் சுமையற்றதாகும்.**
**2. வேகத்திலும், வேகக் குறைவிலும் ஏற்படும் கால மாற்றங்கள், திருப்பங்கள்.**
**3. ஏதோ (மிகக் குறைவான) மின்சாரம் பாய்ந்தாற் போன்ற தூண்டுணர்வு பெறுதல்.**
**4. உடல் வெப்பநிலை அதிகரித்தல்.**
**5. நரம்பு மண்டலத்தின் பேரமைதியுடன் கூடிய செயல்பாடு.**
**6. விதவிதமான வண்ணத் தோற்றங்கள்.**
**7. மன இயல் மேம்பாடும், உயர்நிலை மனம் அடைதலும், எண்ணங்கள் சீர் பெறுதல்.**

*****தூண்டப்படும் மனோசக்தி ( Stimulation of Psychic Power )*
புலன்களின் அதீத சக்தி ( ESP ) கண்டறியும் ஒரு ஆய்வு நிறுவனம் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியாவில் ஒரு ஆய்வை நிகழ்த்தியது. அந்த ஆய்வின்போது ஒரு பிரமிட் வடிவ 'வெப்பமானி' ( incubator ) எண்ணங்களின் தன்மையை அறிய பயன்படுத்தப்பட்டது. அதில் பிரார்த்தனை செய்யும் ஒரு அடியவரின் வேண்டுகோள்கள் பூரணமாக்கப்படுவதையும், பலம் பெறுவதையும் கண்டறிந்தனர். பிரமிட் அடியில் நாம் செய்யும் பிரார்த்தனைகளும், தியானமும் அதிசயத்தக்க வகையில் பயன் தருகிறது என்று கண்டுபிடித்தனர்.
*பிரமிட் உள்ளே எழும் ரீங்காரம் ( Recorance in Pyramids )*
ஒரு அழகிய, இனிமையான ரீங்கார ஒலி பிரமிட் உள்ளே இடைவிடாது நிகழ்வதை ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த டாக்டர். கார்ல் பெனெடிக்ஸ் கண்டுபிடித்தார். மற்றும் இரண்டு ஜெர்மன் விஞ்ஞானிகளும் அதை உண்மை என ஆராய்ந்து நிரூபித்தனர்.

*பிரமிட் பற்றிய சுவாரஸ்யமான விஷயங்கள் சில ( Interesting Information on Pyramids )*

*பிரமிட் பக்க அலங்காரம் ( Decoration on Pyramid Sides )*

பிரமிடின் பக்கங்கள் அழகுற நேர்த்தியோடு அலங்கரிக்கப்பட்டால் அவை மகிழ்ந்து அதிக பயன் தருகின்றன.
எட்கர் கெய்ஸி ( Edgar Cayce ) : உலக மனோசக்தி நிபுணர்களில் ஒருவரான எட்கர் கெய்ஸி சொல்கிறார், " கிசா பிரமிட் வெறுமனே உயிரற்ற மனித உடலை பாதுகாக்க மட்டும் கட்டப்பட்டது அல்ல. மனித இன வளர்ச்சி சரித்திரத்தை (முதலில் இருந்து 1998 வரை) போற்றிப் பாதுகாக்கும் ஒரு அரிய பொக்கிஷமும்கூட என்கிறார். இந்த சரித்திரம் கணித, கணக்கில் ( Geometry ) மற்றும் கோள் இயல் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது என்கிறார்.
மேன்லி பி. ஹால் ( Manly P. Hall ) என்ற ஒரு ஆன்மிகவாதி தனது "எல்லாக் காலத்திய ரகசிய போதனைகள்" ( The Secret Teachings of All Ages ) என்ற நூலில் பிரமிடின் உயர்தன்மையை மேம்படுத்தி எழுதுகிறார். கடைசிக் கண்டமான 'அட்லாண்டிஸ்' வாசிகளால் கட்டப்பட்டவை என்கிறார். அவரின் கூற்றுப்படி முடிவற்ற ஞானம் மற்றும் உலகின் 'நிரந்தரக் காப்பாளர்', போஷாக்காளர், நலம் விரும்பி, பாதுகாவலர் பிரமிட்தான் என்கிறார்; உலகின் ஞானப்பெட்டகம் பிரமிட் உள்ளே உள்ளது என்கிறார்.
பிரமிட் மலை போன்ற அமைப்புடன் இருப்பதே 'புனிதமலை', கடவுளின் இருப்பிடம் இவற்றை நினைவுபடுத்துவதுபோல் உள்ளது. அதன் பரந்த அடிப்பகுதி அது ஒரு ஞான வீடு என்று நினைவுபடுத்துகிறது.
இயற்கை மீது அமைக்கப்பட்ட ஒரு ஞான வீடு அது. இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்ட ஞான வீடு எனலாம். அதன் கோணங்கள், நிசப்தம், அபரிமிதம், புத்திக்கூர்மை மற்றும் உண்மையை நினைவூட்டுகின்றன. (இவை அனைத்தும் இயற்கையின் குணங்கள்). பிரமிடின் தென்பகுதி 'குளிர்மையையும்', வடபகுதி 'வெப்பத்தையும்' மேற்கு 'இருட்டையும்', கிழக்கு 'ஒளியையும்' நினைவூட்டுகின்றன. (இவை அனைத்தும் இயற்கையின் தன்மைகள்). அதன் முக்கோண வடிவோ சக்தி, ஞானம், மனசாட்சி ஆகியவற்றைக் கொண்ட 'ஆன்மிக சக்தியை' நினைவுபடுத்துகிறது (என்னே ஒரு அர்த்தமுள்ள, அற்புதமான ஒப்பீடு!).
எலேனார் மெர்ரி ( Eleanor Merry) எனும் பெண்மணி தனது 'ஜொலிக்கும் / சுடர்விடும் கதவு'( The Flaming Door) எனும் புத்தகத்தில் குறிப்பிடுவதாவது : 'பிரமிட் இறப்பையும், அவளது மறுபிறப்பையும் காட்டுகிறது என்கிறார். அதாவது உடல் மறைகிறது! அப்போது ஆன்மா விழிக்கிறது! அங்கிருக்கும் (பிரமிட் உள்ளே) மனிதன் தன் தொடர்ந்த பிறவிகளின் காரணத்தையும், தன் பிறப்பின் நோக்கத்தையும் கண்டறிந்து ஞானம் பெறலாம் என்கிறார். பௌதிக உடல் தாண்டிய ஆன்மிக அனுபவங்கள் பெற்று முதல் புனித மனிதனைப்போல மாறலாம் என்கிறார். ஆன்மிக உலகக் காட்சிகள் காணலாம் என்கிறார்.

*பிரமிட் பற்றிய சுவாரஸ்யமான விஷயங்கள் சில ( Interesting Information on Pyramids )*

*பிரமிட் பக்க அலங்காரம் ( Decoration on Pyramid Sides )*

பிரமிடின் பக்கங்கள் அழகுற நேர்த்தியோடு அலங்கரிக்கப்பட்டால் அவை மகிழ்ந்து அதிக பயன் தருகின்றன.
எட்கர் கெய்ஸி ( Edgar Cayce ) : உலக மனோசக்தி நிபுணர்களில் ஒருவரான எட்கர் கெய்ஸி சொல்கிறார், " கிசா பிரமிட் வெறுமனே உயிரற்ற மனித உடலை பாதுகாக்க மட்டும் கட்டப்பட்டது அல்ல. மனித இன வளர்ச்சி சரித்திரத்தை (முதலில் இருந்து 1998 வரை) போற்றிப் பாதுகாக்கும் ஒரு அரிய பொக்கிஷமும்கூட என்கிறார். இந்த சரித்திரம் கணித, கணக்கில் ( Geometry ) மற்றும் கோள் இயல் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது என்கிறார்.
மேன்லி பி. ஹால் ( Manly P. Hall ) என்ற ஒரு ஆன்மிகவாதி தனது "எல்லாக் காலத்திய ரகசிய போதனைகள்" ( The Secret Teachings of All Ages ) என்ற நூலில் பிரமிடின் உயர்தன்மையை மேம்படுத்தி எழுதுகிறார். கடைசிக் கண்டமான 'அட்லாண்டிஸ்' வாசிகளால் கட்டப்பட்டவை என்கிறார். அவரின் கூற்றுப்படி முடிவற்ற ஞானம் மற்றும் உலகின் 'நிரந்தரக் காப்பாளர்', போஷாக்காளர், நலம் விரும்பி, பாதுகாவலர் பிரமிட்தான் என்கிறார்; உலகின் ஞானப்பெட்டகம் பிரமிட் உள்ளே உள்ளது என்கிறார்.
பிரமிட் மலை போன்ற அமைப்புடன் இருப்பதே 'புனிதமலை', கடவுளின் இருப்பிடம் இவற்றை நினைவுபடுத்துவதுபோல் உள்ளது. அதன் பரந்த அடிப்பகுதி அது ஒரு ஞான வீடு என்று நினைவுபடுத்துகிறது.
இயற்கை மீது அமைக்கப்பட்ட ஒரு ஞான வீடு அது. இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்ட ஞான வீடு எனலாம். அதன் கோணங்கள், நிசப்தம், அபரிமிதம், புத்திக்கூர்மை மற்றும் உண்மையை நினைவூட்டுகின்றன. (இவை அனைத்தும் இயற்கையின் குணங்கள்). பிரமிடின் தென்பகுதி 'குளிர்மையையும்', வடபகுதி 'வெப்பத்தையும்' மேற்கு 'இருட்டையும்', கிழக்கு 'ஒளியையும்' நினைவூட்டுகின்றன. (இவை அனைத்தும் இயற்கையின் தன்மைகள்). அதன் முக்கோண வடிவோ சக்தி, ஞானம், மனசாட்சி ஆகியவற்றைக் கொண்ட 'ஆன்மிக சக்தியை' நினைவுபடுத்துகிறது (என்னே ஒரு அர்த்தமுள்ள, அற்புதமான ஒப்பீடு!).
எலேனார் மெர்ரி ( Eleanor Merry) எனும் பெண்மணி தனது 'ஜொலிக்கும் / சுடர்விடும் கதவு'( The Flaming Door) எனும் புத்தகத்தில் குறிப்பிடுவதாவது : 'பிரமிட் இறப்பையும், அவளது மறுபிறப்பையும் காட்டுகிறது என்கிறார். அதாவது உடல் மறைகிறது! அப்போது ஆன்மா விழிக்கிறது! அங்கிருக்கும் (பிரமிட் உள்ளே) மனிதன் தன் தொடர்ந்த பிறவிகளின் காரணத்தையும், தன் பிறப்பின் நோக்கத்தையும் கண்டறிந்து ஞானம் பெறலாம் என்கிறார். பௌதிக உடல் தாண்டிய ஆன்மிக அனுபவங்கள் பெற்று முதல் புனித மனிதனைப்போல மாறலாம் என்கிறார். ஆன்மிக உலகக் காட்சிகள் காணலாம் என்கிறார்.

/ முற்றும் /
( "பிரமிட் சக்தியின் பேராற்றல்" என்ற புத்தகத்திலிருந்து)
( தமிழாக்கம் செய்தவர்: திருமதி. வத்ஸலா முரளிதர்)